விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 06 திங்கட்கிழமை (20.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 152

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## யாழ். பண்ணையில் விபத்து; ஒருவர் பலி, இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தீவகம் பண்ணை வீதியில் இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்தில் கொக்குவிலைச் சேர்ந்த 35 வயதுடைய காப்புறுதி முகாமையாளரான முருகையா முகுந்தராஜ் என்ற குடும்பஸ்



தரே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று மாலை 5 மணியளவில் 24

## விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்தது உறுதி

### மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் FBI அமைப்பு உலகில் மிகவும் பயங்கரமான பயங்கரவாத அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பை 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அறிவித்ததாகவும் அந்தப் பயங்கரவாதம், 2009 ஆம் ஆண்டு மே



மாதம் 19 ஆம் திகதி முற்பகல் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்தார் என்பது உறுதியானது முடிவுக்கு வந்தது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 24

## 73 ஆர்.பி.ஜி. குண்டு செலுத்திகள்

கடுவெலயில் மீட்பு



24

# புலிகளை தோற்கடிக்க இந்திய இராணுவத்தாலேயே முடியாமல் போய்விட்டது

### போர் வெற்றிக் கொண்டாட்டத்தில் மைத்திரி

(கொழும்பு)

**இந்திய இராணுவத்தால்கூட விடுதலைப்புலிகளை தோல்வியடையச் செய்யமுடியாமல் போனது என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பல்வேறு ஆக்கிரமிப்புக்களை எதிர்கொண்ட எமது இராணுவம் இறுதியாக வெற்றியிலக்கை அடைந்தது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

இன்று நாடு முகங்கொடுத்திருக்கும் பயங்கரவாத சவாலை இலங்கையிலிருந்து முற்றாக ஒழித்து நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்குரிய ஆற்றல் எமது இராணுவத்தினரிடம் காணப்படுகிறது. முப்படைகளின் தலைவர் என்ற வகையில் நான் உறுதியாக நம்புகிறேன்.

நேற்றுமுற்பகல் இடம்பெற்ற "இராணுவத்தினரின் அர்ப்பணிப்பை நினைவுகூரும்" பத்தாண்டு



பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது பேசிய 24

## மயங்கி விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

ஒட்டுசுட்டானில் சோகம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட சின்னச் சாளம்பனை சேர்ந்த 24

## மாங்குளத்தில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் இரண்டாம் ஒழுங்கை புதிய கொலனி பகுதியிலிருந்து ஒருவர் 24

## ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது

### பந்துல எம்.பி. சீற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க எந்த வகையிலும் இடமளிக்க முடியாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தேர்தலை பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளோம். எந்த வகையிலும் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க இடமளிக்க மாட்டோம்.

பதற்றத்தை ஏற்படுத்த 24

## புலிகள் மீதான தடை தமிழுணர்வுக்கு எதிரானது

### பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(தஞ்சாவூர்)

விடுதலைப் புலிகள் மீது மத்திய அரசு விதித்துள்ள தடை நீடிப்பு தமிழுணர்வுக்கு எதிரானது என்றார் உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவரும் தமிழர் தேசிய முன்னணி தலைவருமான பழ. நெடுமாறன்.

தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலையில் நடைபெற்ற இனப்படுகொலை நாள் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார். 23

## இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்திற்கான வரி அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படுகின்ற பெரிய வெங்காயத்திற்கான தீர்வை வரி, கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் பி. ஹரிசன் இதனைத் தெரிவித்துள்ளார். தற்போதும் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி 24

## பயங்கரவாதத்துடன் தொடர்பு பாராளுமன்ற ஊழியர் கைது

(கொழும்பு)

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் பாராளுமன்ற ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகலில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் அவர் கைது செய்யப்பட்டார். 24

## எவ்வித போர்க்குற்றங்களும் இலங்கையில் இடம்பெறவில்லை

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அடிப்படைவாதிகளின் தாக்குதலை தொடர்ந்து முப்படையினரின் சேவையினாலேயே நாடு பாதுகாக்கப்பட்டுள்ளது. எமது நாட்டு இராணுவத்தை நாம் முதலில் எவ்விடத்திலும் விட்டுக் கொடுக்காமல் இனியாவது பெருமைப்படுத்த அரசாங்கம் பழகிக் கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. 23

## யாழ். கோண்டாவில் பகுதியில் தொடருந்துடன் மோதுண்டு குடும்பத்தலைவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் தொடருந்து நிலையத்துக்கு அண்மையில் தொடருந்துடன் மோதுண்டு குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்றது.

விபத்தில் சுன்னாகத்தைச் சேர்ந்த 49 வயதுடைய குடும்பத் தலைவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

# அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## ஜே.வி.பி முன்வைக்கத் திட்டம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராக அவநம்பிக்கை பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கு ஜேவிபி தயாராகிறது.

ஜேவிபியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார.

இதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாளை 21ம் திகதி கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், இதுகுறித்தும் இந்த கூட்டத்தில் முக்கிய தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த மாதம் 21ம் திகதி நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான தகவல்கள் முன்னதாகவே கிடைக்கப் பெற்றும், அதனை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது.

இது மிகவும் பாரதூரமான விடயம். நாட்டில் உள்ள அடிப்படைவாத செயற்பாடுகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறி இருக்கிறது.

இந்த நிலையிலேயே அரசாங்கத்துக்கு எதிராக அவநம்பிக்கைப் பிரேரணையை முன்வைக்க தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (3)

# ஷரியா பல்கலைக்கழகத்தை அரசுடமையாக்க வேண்டும்

## மகிந்த வேண்டுகோள்

மட்டக்களப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஷரியா பல்கலைக்கழகத்தை முழுமையாக அரசுடமையாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இவ்விடயத்தில் எதிர்தரப்பினர் முழுமையான ஆதரவு வழங்குவோம் என்று எதிர்க்கட்சி தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

களனி ரஜமஹா விகாரையில் நேற்று வெசாக் தின வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடிப்படைவாதிகளின் அச்சுறுத்தலினால தேசிய வெசாக் பண்டிகையினை கொண்டாடாமல் இருக்க முடியாது. அனைவரும் தைரியமாக செயற்பட வேண்டும. நிலைமைகளை வெற்றி கொள்ள வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் எனவும் அவர் இதன்போது கேட்டுக் கொண்டார். (3)


## கைகொடுக்கும் நண்பர்கள்

மனதில் சுமையா? உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம் உங்கள் துயரங்களையும் துன்பங்களையும் செவிமடுக்க நாங்கள் இருக்கிறோம். இரகசியம் பேணப்படும்.எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்.**
**175, நாவலர் வீதி.**
**077 900 8776.**

ஸ்ரீலங்கா
சுமித்திரையோ

(8860)



## மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசானும் உதவி அதிபருமான

### திருமதி பரமேஸ்வரி செல்வநாயகம்

(இ.ஆ.சே.I)

2019.05.20 இன்று ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெறுவதால் அவரது ஓய்வுக்காலம் சிறக்க மனதார வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

| | |
|---|---|
| மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் | - 6 வருடம் |
| மு/புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம் | - 9 வருடம் |
| மு/புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம் | - 9 வருடம் |
| யாழ்/பெரியபுலம் மகா வித்தியாலயம் | - 1 வருடம் |
| மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி | - 7 வருடம் |

வாழ்த்துவோர்:- அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு.

(C-6423)


# மரண அறிவித்தல்கள்



பிறப்பு 1936.12.07

இறப்பு 19.05.2019

## சித்த வைத்தியர் அரியகுட்டி நாகமணி

கற்சிலைமடு, ஒட்டுசுட்டானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சித்த வைத்தியர் அ.நாகமணி (RIMP) அவர்கள் நேற்று (19.05.2019) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கற்சிலைமடுவில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (20.05.2019) நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் நல்லடக்கத்துக்காக பேராறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-6424)

தகவல்:- குடும்பத்தினர்
மகன்: வைத்தியர் நா.வன்னியசிங்கம்
(புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்)

கற்சிலைமடு,
ஒட்டுசுட்டான்.

மண்ணில் 08 - 09 - 1908



விண்ணில் 19 - 05 - 2019

## திருமதி மரியை பறுநாந்து

(8ம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு)

8ம் வட்டாரம் மந்துவில் புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியை பறுநாந்து நேற்று (19.05.2019) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசை பறுநாந்து அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோ தொம்மாசி அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மோசேஸ், அன்னம்மா, தேவதாஸ் மற்றும் அந்தோனிப்பிள்ளை, கிறகோரி, யோசேப்பின் (வியாழி), சிங்கராசா (இந்தியா), மாகிறேற், இசிதோர் (முன்னாள் புதுக்குடியிருப்பு றோ.க பாடசாலை அதிபர்), யேசுதாசன் (ஓய்வுபெற்ற மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான மோசேஸ் லூர்த்தம்மா, அருளானந்தம், இரத்தினம் மற்றும் லூர்த்தம்மா, அன்னமலர், எட்வேட், மாகிறேற் (இந்தியா), தனம் (பிரான்ஸ்) யசிந்தா (தவம்ரீச்சர்) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து 20-05-2019 இன்று மாலை 4.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித சூசையப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகட்கு:
0094770430323,
0094775382168, 0094775849419

தகவல்:- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
மற்றும் பாட்டப்பிள்ளைகள்

## மனிதப் படுகொலைகளைப் புரிந்த


# கோத்தபாய ஜனாதிபதியானால்

# நாட்டில் மீண்டும் ரத்த ஆறு ஓடும்

## சிறையில் அடைக்காமல் வெளியில் உலாவவிட்டது ஐ.தே.க.அரசு செய்த பாரிய தவறு - அநுரகுமார

(கொழும்பு)

**மனிதப் படுகொலைகளைப் புரிந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சிறையில் அடைக்காமல் வெளியில் உலாவவிட்டது ஐக்கிய தேசியக் கட்சி அரசு செய்த பாரிய தவறென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கி வென்றால் இந்நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓடுமென்றும் அநுரகுமார எச்சரித்துள்ளார்.**





ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கி வென்றதும் பயங்கரவாதிகளைக் கூண்டோடு அழிப்பதே தனது முதல் இலக்கு என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார மேற்கண்டவாறு எச்சரித்தார்.

"எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் மனிதப் படுகொலைகளைப் புரிந்த கோத்தபாய ராஜபக்ஷவை சிறையில் அடைக்காமல் வெளியில் உலாவவிட்டது ஐக்கிய தேசியக் கட்சி அரசும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் செய்த பாரிய தவறாகும்.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாத அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பை கோத்தபாய ராஜபக்ஷ தீனிபோட்டு வளர்த்துள்ளார் என அரச தரப்பால் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பயங்கரவாதிகளுக்கு தீனி போட்ட கோத்தபாய ஜனாதிபதியானால் மீண்டும் அந்த பயங்கரவாதிகளுக்குத் தீனிபோட்டே தீருவார்.

பயங்கரவாதிகளை இல்லாதொழிப்பேன் என்று அவர் கூறுவது நகைப்புக்குரியது.

அத்தோடு கடந்த ஆட்சியில் இடம்பெற்ற வெள்ளைவான் கடத்தல்கள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் மனிதப் படுகொலைகள் மீண்டும் அரங்கேறும்" என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

---

## இலங்கையர்களை அச்சுறுத்திய

# கிறீஸ் பூதத்தின் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள்

### பாதுகாப்புப் பிரிவினர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையர்களை அச்சுறுத்திய கிறீஸ் பூதத்தின் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளே இருந்தார்கள் என பாதுகாப்புப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

கிறீஸ் பூதம் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் புலனாய்வு வேலையை ஆரம்பிக்கும் போதே பயங்கரவாதி சஹ்ரானின் எழுச்சி ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

புதிய அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த போது இராணுவத்தின் பயங்கரவாத சோதனை தொடர்பான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

புலனாய்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டமையால், ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு அது சாதகமாக மாறியுள்ளது. இதன் காரணமாக அவர்களின் செயற்பாடுகள் குறித்து தெரியாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வுப் பிரிவை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. (இ-7)

---

## யுத்தம் முடிவடைந்து 10 ஆண்டுகள்; பிரித்தானியா, அமெரிக்கா இரங்கல்


Theresa May @theresa_may · 22h
Ten years on from the end of the Sri Lankan conflict we should remember all those who lost their lives. Our relationship with Sri Lanka is important, and after the tragic events at Easter it is crucial communities work together for a peaceful future.
243 147 612

(லண்டன்)

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் பிரித்தானியா, கனடா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களது இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளன.

பிரித்தானிய பிரதமர் தெரேசா மே தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து பத்தாண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அதில் உயிரிழந்த அனைவரையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இலங்கையுடனான எமது உறவு முக்கியமானது. குறிப்பாக ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பின்னர், அமைதியான எதிர்காலத்திற்காக நாம் ஒன்றாக இணைந்து செயற்படுவது முக்கியமானதொன்றாகியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் மூன்று தசாப்த காலம் சிவில் யுத்தம் நிறைவடைந்து பத்து ஆண்டுகள் முடிவின் நிமித்தமான இந்த பெருமிதமான ஆண்டு நிறைவை பொறுத்தவரையில் பெரும் எண்ணிக்கையிலான உயிரிழப்புகள், காணாமல்போதல் மற்றும் கடந்த காலத்தின் உடல், உணர்வு ரீதியான வடுக்களை இன்னும் கொண்டிருக்கும் அனைவரையும் நாம் மதிக்கின்றோம் என்ற வகையில் சமாதானம், நீதி மற்றும் நல்லிணக்கத்துக்கான இலங்கையின் முன்னெடுப்புக்களை நாம் தொடர்ந்தும் ஆதரிக்கின்றோம் என்றும் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

---

# இலங்கை மீது சைபர் தாக்குதல்!

(கொழும்பு)


இலங்கையில் காணப்படும் முக்கியமான சில இணையத் தளங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குவைத் தூதரகம் மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் உட்பட பல இணையத்தளங்கள் மீது குறித்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டாலும் அவை சீர் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு மேலும் சில இணையத்தளங்களை மீள இயங்க வைக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இணையத் தளங்கள் குறித்து கவனமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# பதிலடிக்கு நிகிடி 'ரெடி'


நிகிடி

"கடந்த ஆண்டு நடந்த ஒரு நாள் தொடரில் டுபிளசி, டி வில்லியர்ஸ் உள்ளிட்டோர் இடம்பெறவில்லை. இதனால், இந்திய அணி 5-1 என கைப்பற்றியது. இம்முறை, உலக கிண்ணத் தொடரில் அனைத்து வீரர்களும் அணிக்கு திரும்பி விட்டனர். நிச்சயமாக இந்திய அணிக்கு பதிலடி தர முயற்சிப்போம்," என, தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் நிகிடி தெரிவித்தார்.

இங்கிலாந்து மண்ணில் வரும் 30ல் உலக கிண்ணத் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. இதில் 'நடப்பு சம்பியன்' அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் மோதுகின்றன.

'ரவுண்டு ரொபின்' முறையில் நடப்பதால், ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளை எதிர் கொள்ள வேண்டும். இந்திய அணி தனது முதல் லீக் போட்டியில் (ஜூன் 5, சவுத் தாம்ப்டன்) தென்னாபிரிக்காவை சந்திக் கிறது.

இது குறித்து தென்னாபிரிக்காவின் நிகிடி கூறியது, கடந்த ஆண்டு எங்கள் மண்ணில் நடந்த ஒரு நாள் தொடரை இந்திய அணி 5-1 என கைப்பற்றியது. இத்தொடரில், அணித் தலைவர் டு பிளசி, டி வில்லியர்ஸ், குயின்ரன் என திறமையான வீரர்கள் சில போட்டிகளில் பங்கேற்கவில்லை. இதனால் தொடரை இழந் தோம். உலகக் கிண்ணத் தொடரில் அனைத்து வீரர்களும் அணிக்கு திரும்பி விட்டனர். இம் முறை இந்தியாவை வீழ்த்த முயற்சிப்போம்.

**முதல் கிண்ண கனவு**

எங்கள் அணியால் ஒரு முறை கூட, கிண்ணம் வெல்ல முடியவில்லை. சர்வதேச போட்டிகளில் பங்கேற்க தொடங்கியதும் உலக கிண்ண அணியில் பங்கேற்க வேண்டும் என எண்ணினேன். தற்போது, அணியில் இடம் கிடைத்துவிட்டது. இனி சம்பியன் பட்டம் வெல்ல பங்களிப்பு கொடுக்க முயற்சி செய்வேன். உலக கிண்ணத்தை தென்னாபிரிக்க மண்ணிற்கு எடுத்து செல்ல வேண்டும் என்ற கனவுடன் உள்ளேன். இவ்வாறு நிகிடி கூறினார்.

# ஓய்வுபெறுகிறார் யுவராஜ்!

## ரி20 லீக் தொடரில் பங்கேற்க ஆர்வம்


யுவராஜ் சிங்

இந்திய அணி வீரர் யுவராஜ் சிங், கனடா, அயர்லாந்தில் நடக்கும் 'ரி20' லீக் தொடரில் பங்கேற்கும் எண்ணத்தில் உள்ளார். இவர் விரைவில் சர்வதேச அரங்கிலிருந்து விடை பெறுவார் எனத்தெரிகிறது.

இந்திய அணியின் 'சீனியர்' வீரர் யுவராஜ் சிங், (வயது-37), சர்வதேச 'ரி20' போட்டிகளில் ஒரே ஓவரில் 6 சிக்சர் விளாசியவர். இந்திய அணி இரண்டு உலக கிண்ணம் (2007- 'ரி20', 2011- 50 ஓவர்) வெல்லவும் கைகொடுத்தார். கடைசியாக, 2017 ஜூனில் மே. தீவுகளுக்கு எதிராக ஆண்டி குவா வில் நடந்த ஒரு நாள் போட்டியில் பங்கேற் றார். இதன்பின், 'போர்ம்' இல்லாத காரணத்தால் அணியில் இடம் கிடைக்கவில்லை.

**மும்பையில் ஜொலிக்கவில்லை**

சமீபத்திய, பிரிமியர் தொடரில் மும்பை அணிக்காக அடிப்படை தொகையான ரூ. ஒரு கோடிக்கு வாங்கப்பட்டார். நான்கு போட்டியில் மட்டுமே விளையாடிய யுவராஜ், 98 ஓட்டங்கள் எடுத்தார். இளம் வீரர்களின் ஆதிக்கம் காரணமாக, தேசிய அணியில் யுவராஜ் விளையாடும் வாய்ப்பு ஏறக்குறைய முடிந்துவிட்டது. இவரும் சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வு பெறும் முடிவில் இருப்பதாக தெரிகிறது.

**கனடா தொடர் ஆர்வம்**

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) அதிகாரி ஒருவர் கூறுகையில்," இந்திய வீரர் யுவராஜ் சிங் ஓய்வுபெறும் எண்ணத்தில் உள்ளார். பி.சி.சி.ஐ., விதிப்படி, உள்ளூர் அல்லது சர்வதேச அளவில் விளையாடும் வீரர்கள் அந்நிய மண்ணில் நடக்கும் 'ரி20' லீக் தொடரில் பங்கேற்க முடியாது. சமீபத்தில், கரீபியன் பிரிமியர் லீக் தொடரில் வீரர்கள் பட்டியலில் இர்பான் பதான் இடம்பெற்றிருந்தார். இவர் இன்னும், உள்ளூர் போட்டியில் பங்கேற்பதால் அனுமதி வழங்க மறுத்துவிட்டோம். யுவராஜ் சிங்கை பொறுத்தவரை ஓய்வு பெற்றுவிட்டால், கனடா, அயர்லாந்து, நெதர்லாந்து நாடுகளில் நடக்கும் விளையாடலாம் என எண்ணுகிறார். இது குறித்து, விரைவில் பி.சி.சி.ஐ.,யிடம் பேச உள்ளார்," என்றார்.

# கிண்ணம் வென்றால் 28 கோடி

## பரிசுத்தொகை அறிவிப்பு



உலக கிண்ணத் தொடருக்கான பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டது. கிண்ணம் வெல்லும் அணிக்கு, ரூ. 28 கோடி கிடைக்கவுள்ளது.

இங்கிலாந்தில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதற்கான பரிசுத் தொகை விபரங்களை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) அறிவித்தது. இதன்படி தொடரின் மொத்த பரிசுத்தொகை ரூ. 70.16 கோடியாக உள்ளது.

இத்தொடரில் 11 மைதானங்களில் 45 லீக் போட்டிகள் நடக்கவுள்ளன. ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறும் அணிக்கு ரூ. 28 லட்சம் கிடைக்கும். லீக் சுற்றுடன் கிளம்ப உள்ள 6 அணிகளுக்கு தலா ரூ. 70 லட்சம் வழங்கப்பட உள்ளது.

புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடம்பெறும் அணிகள் அரையிறுதிக்கு செல்லும். இதில் தோற்று வெளியேறும் இரண்டு அணிகளுக்கு தலா ரூ. 5.6 கோடி தரப்பட உள்ளது. இறுதிப் போட்டியில் தோற்கும் அணி ரூ. 14 கோடி பெறும். சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு கிண்ணத்துடன், ரூ. 28 கோடி கொடுக்கப்படும்.




# 'ஹட்ரிக்' நாயகன் மலிங்க

கடந்த 2007ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் கவர்ச்சிகரமான வீரராக தேர்வு செய்யப்பட்டார், இலங்கையின் லசித் மலிங்க. வித்தியாசமான தலை அலங்காரத்துடன், கல்லெடுத்து எறிவது போன்ற இவரது வேகப்பந்துவீச்சு, எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு தொல்லையாக அமைந்தது. இவரது 'யோர்க்கர்' பந்துகள் புகழ் பெற்றவை.

இத்தொடரில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 'சுப்பர் 8' போட்டியில் அசத்திய மலிங்க, 'ஹட்ரிக்' சாதனை படைத்து வெற்றிக்கு வித்திட்டார். ஆட்டத்தின் 45வது ஓவரின் கடைசி 2 பந்தில் பொலக் (13), அன்ட்ரூ ஹோல் (0) ஆகியோரை அவுட்டாக்கிய இவர், 47வது ஓவரின் முதலிரண்டு பந்தில் காலிஸ் (86), நிடினியை (0) வெளியேற்றினார். இதனையடுத்து உலக கிண்ண அரங்கில் தொடர்ச்சியாக 4 விக்கெட் கைப்பற்றிய பவுலரானார். தொடர்ந்து அசத்திய இவர், 2011ல் கென்யாவுக்கு எதிரான போட்டியிலும் 'ஹட்ரிக்' சாதனை படைத்தார். இதன்மூலம் உலக கிண்ண வரலாற்றில் இரண்டு முறை 'ஹட்ரிக்' சாதனை படைத்த முதல் வீரர் என்ற சாதனை படைத்தார்.



**தெரியுமா?**

உலக கிண்ணத் தொடரில், ஒரு போட்டியில் அதிக 'மெய்டன்' ஓவர்கள் வீசிய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்தியாவின் பிஷன் சிங் பேடி முதலிடத்தில், உள்ளார். இவர், 1975ல் கிழக்கு ஆபிரிக்கா அணிக்கு எதிரான போட்டியில் 8 'மெய்டன்' ஓவர்கள் வீசினார். மொத்தம், 12 ஓவர்களில், 8 'மெய்டன்' உட்பட 6 ஓட்டங்கள் மட்டும் வழங்கி, ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

# குத்துச்சண்டை: சாதிப்பாரா மேரி கோம்

இந்திய ஓபன் குத்துச்சண்டையில் இந்திய வீராங்கனை மேரி கோம் தங்கம் வென்று சாதிப்பார் என, எதிர்பார்க்கப்படுகிறது.

அசாம் மாநிலம் கவுகாத்தியில், இந்திய ஓபன் குத்துச்சண்டை தொடரின் 2வது சீசன் இன்று ஆரம்பமாகிறது. இதில் 16 நாடுகளை சேர்ந்த 200க்கும் மேற்பட்ட குத்துச் சண்டை நட்சத்திரங்கள் பங்கேற்கின்றனர். இந்தியா சார்பில் 72 பேர் விளையாடு கின்றனர்.

பெண்களுக்கான 51 கி.கி., எடைப்பிரிவில் 6 முறை உலக சம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் மேரி கோம் பங்கேற் கிறார். உலக கிண்ணத் தொடருக்கு தயாராகும் வகையில் இவர், கடந்த மாதம் நடந்த ஆசிய குத்துச்சண்டை சம்பியன்ஷிப் தொடரை புறக்கணித்தார். கடந்த ஆண்டு இவர், 48 கி.கி., எடைப்பிரிவில் தங்கம் வென்றிருந் தார்.

ஆண்கள் பிரிவில் அமித் பங்கால் (52 கி.கி.,), ஷிவா தபா (60 கி.கி.,), கவுரவ் பிதுரி (56 கி.கி.,) உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். பெண்கள் பிரிவில் சிம்ரன்ஜித் கவுர் (60 கி.கி.,), சரிதா தேவி (60 கி.கி.,), பூஜா ராணி (75 கி.கி.,), சோனியா (57 கி.கி.,), சாக்சி (57 கி.கி.,) உள்ளிட்டோர் விளையாடுகின்றனர்.

# மாற்று வீரர்களாக பிராவா, பொலார்ட்


பிராவோ

உலக கிண்ணத் தொடருக்கான மே. தீவுகள் அணியின் மாற்று வீரர்களாக டுவைன் பிராவோ, பொலார்ட் உள்ளிட்ட 10 பேர் அறிவிக்கப்பட்டுள்ளனர்:

இங்கிலாந்தில், வரும் 30ல் ஐ.சி.சி., உலக கிண்ணத் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. இதற்கான 15 பேர் கொண்ட மே.தீவுகள் அணியில் 'சகலதுறை வீரர்' பொலார்ட் தேர்வு செய்யப்படவில்லை. இந்நிலையில், 10 பேர் கொண்ட மாற்று வீரர்கள் பட்டியலை கிரிக்கெட் மே.தீவுகள் (சி.டபிள்யு.ஐ.,) அறிவித்தது. இதில், கடந்த ஒக்ரோபர் மாதம் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்த 'சகலதுறை வீரர்' டுவைன் பிராவோ இடம் பெற்றுள்ளார். சமீபத்தில் முடிந்த ஐ.பி.எல்., லீக் தொடரில் சென்னை அணிக்காக விளையாடிய இவர், கடைசியாக 2016ல் அபுதாபியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான 'ரி20' போட்டியில் விளையாடினார். இவர், 2014க்கு பின் ஒருநாள் போட்டிகளில் விளையாடவில்லை.

இதேபோல, 2016க்கு பின் ஒருநாள் போட்டிகளில் விளையாடாத மற்றொரு 'சகலதுறை' பொலார்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர், சமீபத்தில் முடிந்த ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணி 4வது முறையாக கிண்ணம் வெல்ல உதவினார்.


இவர்களை தவிர, சுனில் அம்பிரிஸ், ஜோன் கேம்ப்பெல், ஜொனாதன் கார்டர், ராஸ்டன் சேஸ், ஷேன் டவ்ரிச், கீமோ போல், காரி பியர்ரி, ரேமன் ரெய்பர் ஆகியோர் மாற்று வீரர்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.

உலக கிண்ணத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 15 பேர் கொண்ட மே.தீவுகள் அணியினர், சவுத்தாம்ப்டனில் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். மே.தீவுகள் அணி, தனது முதல் போட்டியில் பாகிஸ்தானை வரும் 31ல் நாட்டிங்காமில் சந்திக் கிறது. இப்போட்டிக்கு முன் மே.தீவுகள் அணி, தென்னாபிரிக்கா (மே 26), நியூசிலாந்து (மே 28) அணிகளுக்கு, எதிராக பிரிஸ்டலில் நடக்கவுள்ள பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது.


பொலார்ட்

# ரணிலை பிரதமராக்கி தவறிழைத்து விட்டோம்

## அத்துரலிய ரத்ன தேரர் கவலை



(கொழும்பு)

**ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் பிரதமராக்கி பாரிய தவறிழைத்து விட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முழு அரசாங்கத்தின் கவனயீனமே நாட்டில் பிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இடமளித்துள்ளது. அதற்கான பொறுப்பை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.


ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களை பிரதமராக்கி நாம் தவறிழைத்து விட்டோம். கடந்த காலங்களில் புலனாய்வுத்துறை உட்பட முழு பாதுகாப்புத்துறையையும் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளையே அரசாங்கம் செய்துள்ளது.

அதன் பிரதிபலனையே தற்போது அனுபவிக்கின்றோம் இன்னும் ஆறுமாதங்களில் நாட்டை பாதுகாக்கின்ற ,நேசிக்கின்ற புதிய தலைமைத்துவத்தை நாம் கொண்டுவருவதே ஒரே தீர்வாக அமையும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஹற்றனில் கனமழை!

## 12 வீடுகள் பாதிப்பு





(ஹற்றன்)

டயகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பெய்த கடும் மழையால் அப்பகுதியிலுள்ள ஆறு பெருக்கெடுத்தது. இதனால் 12 வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது. சில வீடுகளின் சுவர்கள் இடிந்துள்ளன. இந்நிலையில் அங்கு வசிக்கும் 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக சமையல் அறைகளிலுள்ள பொருட்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளதன் காரணமாக ஏற்பட்ட சேத விபரங்கள் இன்னும் மதிப்பிடவில்லை. இதனையடுத்து பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை அப்பகுதி பாக்கவோ மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி சண்முகலிங்கம் புஸ்பலீலா (புஸ்பா)**

அபரபட்ச துதியை திதி: 20.05.2019



சொர்க்கம் என்றால் என்னவென்று
உன்னோடு நான் வாழ்ந்த
காலங்களில் தெரிந்தது
ஆனால் நரகம் என்பது இன்னதென்று
இப்போது நான் வாழும் காலத்தில் புரிகின்றது.
நீ வாழ்ந்த போது உன்னைத் தேடி
வராத உள்ளங்கள் உன் மரணத்தின் பின்
ஓடோடி வந்தனர் உன் சொத்துக்காக
உன்னை இழந்த நான் யாருமற்ற அநாதையாய்
உன் நினைவில் கலங்கி நிற்கின்றேனே
இவ் ஐந்து ஆண்டுகளிலே

மண்ணில் புஸ்பமாக மலர்ந்தது 1962.10.26
விண்ணில் புஸ்பமாக மறைந்தது 2014.06.14

தற்காலிக முகவரி:
935, 1/1 கே.கே.எஸ்வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உன் நினைவில் வாடும் உன் அன்பின் துணைவன்
குமார் அருணாச்சலம் சண்முகலிங்கம்
இல 02,கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி.

(8857)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# ஐ.எஸ்.பயங்கரவாதிகள் SMS இளைஞன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையை சேர்ந்த ஒருவரை எல்ல நகர பொலிஸார் கைது செய்துள்ளனர். ஐ.எஸ் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

எல்ல நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஈ.எஸ். பெர் னாண்டோ மாவத்தை, கொழும்பு 6 என்ற முகவரியைச் சேர்ந்த 36 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரின் கையடக்க தொலை பேசியில் ஐ.எஸ். ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய குறுந்தகவல் ஒன்று உள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** தடைகளை விலக்கி தன வரவுகள் பெருகும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாக வரும்.

**மேடம்:** கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, வீண் விரயங்களை தவிர்ப்பது நல்லது, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**இடபம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கடன் தொல்லைகள் குறையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வீட்டுப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்:** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், மற்றவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நீண்டநாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் நாள், உதிரி வருமானம் வந்து சேரும்.

**மகரம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**இராசி பலன்**

கிரகநிலை: சுக் | சூரி. புத | ராகு, செவ் | சனி. கேது | குரு சந்

சந்திராஷ்டமம்: கார்த்திகை

**20.05.2019**

வைகாசி 06, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
துதியை பின்னிரவு 2.51 மணிவரை
கேட்டை பின்னிரவு 3.56 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22 - 8.52 மணிவரை

வளவன்

**தனுசு:** பிரியமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எண்ணங்கள் எளிதில் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**துலாம்:** பூர்வீக சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், செல்வநிலை உயரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த

# மினுவாங்கொடை பள்ளிவாசலில் நேற்று வெசாக் கொண்டாட்டம்

(மினுவாங்கொடை)

**வன்முறைச் சம்பவங்களால் பாதிப்படைந்த கம்பஹா- மினுவாங்கொடையில் உள்ள பள்ளி வாசல்களில் நல்லிணக்க வெசாக் கொண்டாடப் பட்டது. சர்வமதத் தலைவர்கள் மக்களுடன் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வெசாக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.**



அண்மையில் அந்தப் பகுதிகளில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் காரணமாக சிங்கள, முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டிருந்தன. இந்நிலையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாறு வெசாக் வாரம் கொண்டாடப்படுகிறது.

இலங்கையில் பௌத்தர்களால் நேற்று முன்தினம் முதல் வெசாக் வாரம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதனைமுன்னிட்டு இலங்கை முழுவதும் என்றுமில்லாதவாறு வெசாக்கூடுகளும் பௌத்த கொடிகளும் தொங்கவிடப்பட்டுள்ளன. எனினும் மக்கள் கூட்டம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இலங்கையின் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை தாக்குதல்கள் காரணமாக 250 இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருந்தனர்.

இதனையடுத்து நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவியது. அதன் பின்னர் இனங்களுக்கு இடையே முறுகல் நிலையேற்பட்டது. வடமேல்மாகாணத்தின் பல பகுதிகளில் கடந்த 13ஆம் திகதி வன்முறைச்சம்பவங்கள் பதிவாகின.

முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் பல தாக்கப்பட்டு, சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக மக்கள் பெரும் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாறு வெசாக் வாரம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ்.ஆவரங்கால்.நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் இந்து மாமன்றம் நடத்தும் திருஞானசம்பந்தர் குருபூசை தினம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறும். (இ-10)

## வைகாசி விசாக திருவிழா

கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் வைகாசி விசாக திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பொங்கலுடன் ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு விஷேட அபிஷேகம் இடம்பெற்று மாலை 5.45 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் திருவூஞ்சல் இடம்பெற்று மாலை 6.30 மணிக்கு சுவாமி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். நாளை சங்காபிஷேகம் இடம்பெறும். (இ-136)

## யுத்தத்தில் உயிரிழந்த கடற்படையினருக்கு தளபதி மலர் அஞ்சலி



இராணுவத்தினரை கௌரவிக்கும் தேசிய நிகழ்வில் யுத்தத்தில் உயிரிழந்த கடற்படையினரை நினைவுகூரும் நிகழ்வு வெலிசர இராணுவ நினைவகத்தில் நேற்று இடம்பெற்றது. கடற்படை தளபதி அட்மிரல் பியல் டி சில்வா தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது கடற்படைத் தளபதியால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## சேனா படைப்புழுக்களை கட்டுப்படுத்த அவதானம்

இம்முறை சிறுபோகத்தில்சேனா படைப்புழு பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், சேனா படைப்புழுவின் தாக்கத்தை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது என அதன் பிரதிப் பணிப்பாளர் அனுர விஜேதுங்க தெரிவித்தார்.(இ-7)

## மகிந்த கையெழுத்திடாவிட்டாலும் ஆதரவாகவே வாக்களிப்பார்-கம்மன்பில

(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக, ஒன்றிணைந்த எதிரணியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் கையெழுத்திடாவிட்டாலும், அவர், இதற்கு ஆதரவாகவே வாக்களிப்பாரென, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மகிந்த ஏன் கையெழுத்திடவில்லை என அனைவரும் வினவுவதாகத் தெரிவித்த அவர், அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ராஜித சேனாரட்ன ஆகிய இருவருக்கும் எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மகிந்த கையெழுத்திடவில்லை. ஆனால் ஆதரவாக வாக்களித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் எமது தலைவர், அதே போல் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர். எனவே அவரது பதவிக்கு பொருத்தமான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மாத்திரம் தான் அவர் கையெழுத்திடுவார் என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (இ-7)

# மாகாண சபைத் தேர்தலை இனி தாமதப்படுத்த முடியாது

### மகிந்த தேசப்பிரிய உறுதி

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு திகதி ஒன்றைக் கோரியுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை காலம் தாழ்த்தாமல் விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இதன் போது ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலை ஜனாதிபதியினால் நாளைய தினத்தில் வேண்டுமானாலும் நடத்த முடியும்.

எனினும், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு சில காலம் அவசியமாகும்.



இந்த நிலையில், மாகாண சபைத் தேர்தலை இனியும் தாமதப்படுத்த முடியாது என தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

### அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பள்ளியின்

## ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியிலுள்ள சிறுவர் நன்னடத்தை சீர்திருத்தப் பள்ளியில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சமூகத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர்களை நீதிமன்றங்கள் ஊடாக குறித்த சீர்திருத்தப் பள்ளியில் அனுமதித்து மீண்டும் சமூகத்துடன் இணைந்து வாழ அனுமதிக்கப்படுகின்றனர்.

குறித்த சீர்திருத்தப் பள்ளியில் சுமார் 70 பேர் வரையில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களைப் பராமரிப்பதற்கு போதுமான ஆளணி பற்றாக் குறை நிலவுவதாக ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து ஆளணி பற்றாக் குறை சம்பந்தமாக உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார். (இ-10)

# மதூஷை பிணையில் எடுக்க ரூ.50 இலட்சம் கப்பம் கோரல்

## கம்பளையில் ஒருவர் கைது

(கம்பளை)

பல்வேறு குற்றச் செயல்களுக்காக தேடப்பட்டுவந்த சந்தேக நபர் ஒருவர் இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் கோரிய நிலையில் கம்பளையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் பெல் மதுளை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரைப் பயமுறுத்தி போதைப் பொருள் கடத்தல் மன்னன் மாகந்துரே மதூஷை பிணையில் எடுக்க தனக்குப் பணம் தேவை என்றும் 50 இலட்சம் ரூபாவை கப்பமாகக் கோரியுள்ளார்.

இந்நிலையில் 5 இலட்சம் ரூபா தருவதாக தெரிவிக்கப்பட்ட தையடுத்து தனிப்பட்ட ஒரு வங் கிக் கணக்கில் வைப்பில் இடு மாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கஹவத்தை பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்த பொலிஸார் கம்பளை பிரதேசத்திலுள்ள தனியார் வங்கி ஒன்றில் பணத்தை மீளப் பெறும் போது சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (இ-7)

# இது சிங்கள பௌத்த நாடு

## ஐ.தே.க.பொதுச் செயலர் திட்டவட்டம்



(கல்கிஸ்ஸ)

இது சிங்கள பௌத்த நாடு எனவும், அதே வேளை இங்குள்ள சகல மதங்களுக்கும் சமமான உரிமைகள் உள்ளதாகவும் ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்கிஸ்ஸ தர்மபாலாராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அவர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

பௌத்த மதத்தின் அடிப்படைகளையும், கலாசாரத்தையும் பாதுகாத்துக் கொண்டு, பிற மதத்தவர்களுக்கு உரிய இடத்தை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை சீர்குலைக்க இடமளிக்காது, அவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலையின் இரண்டாம் தவணைப் பரீட்சை எந்தவித தடையும் இன்றி நடைபெறும் எனவும், எந்தவொரு குழுவினதும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது எனவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# உயர்பெறுபேறுகளைக் கொண்ட பொருளாதார சமூகக் கருத்திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் ஆரம்பம்

யாழ்.மாவட்டத்தில் அதியுயர் பெறுபேறுகளைக் கொண்ட முன்னுரிமைப்படுத்தப்பட்ட கருத் திட்டங்கள் உடனடியாக ஆரம் பிக்கப்படவுள்ளன. இதில் குருநகர் மீன்பிடித் துறைமுக நங்கூரமிடும் தளம் அபிவிருத்தி, யாழ். அரு ணோதயா கல்லூரி அபிவிருத்தி வேலைத் திட்டம், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கான அவசர உபகரண தேவைகளை பூர்த்திசெய்யும் வேலைத்திட்டம் மற்றும் யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற கட்டடத் தொகுதிகளும் இளைஞர் ஆளுமை விருத்திக்கான அபிவிருத்தி வேலை த்திட்டங்கள் உள்ளடங்குகின்றன என தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் யாழ். பிரதேச செயலக பிரிவின் கீழ் அமைந்துள்ள குருநகர் மீன்பிடித் துறை நங்கூரத் தளமானது 3,117 கடற்றொழிலாளர் குடும்பங்களை உள்ளடக்கிய 10,760 அங்கத்தவர்களைக் கொண்ட கடற்றொழில் மையமாகவும் இதில் 90 வீதமான மக்களின் வாழ்வாதாரம் கடற்றொழிலை மையமாகக் கொண்டுள்ளது. வருடாந்த மீன்பிடி உற்பத்தி 7,390 மெற்றிக் தொன்களாகவும் மேலும் 562 மெற்றிக் தொன் கருவாடு உற்பத்திகளைக் கொண்டதுமான ஒரு கடற்றொழில் பொருளாதார வலயமாகவும் காணப்படுகின்றது.

2000 இற்கும் மேற்பட்ட ஒருநாள் படகுகளும் படகுகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதுடன் 500க்கும் மேற்பட்ட ரோலர் படகுகள் ஆழ்கடலை நோக்கி மீன்பிடித்துறையில் ஈடுபடுவதாகவும் காணப்படுவதுடன் இத் துறையின் அபிவிருத்திக்கு கடற்கரை சார்ந்த மீன்பிடித் துறைக்கான (Offshore) வசதிகள் போதியளவு காணப்படாமையும் குறிப்பாக ஏலமிடும் அறை ,வலை பின்னும் நிலையம், குளிரூட்டல் வசதிகள், எரிபொருள் நிலையம், படகுகள் திருத்தும் தொழிற் பட்டறைகள் போன்றவை காணப்படாதமை இத்துறையின் வளர்ச்சிக்கு பாரிய சவாலாக அமைந்திருப்பதாக குருநகர் பிரதேச மீன்பிடித் தொழிற்சங்கள் தெரிவித்துள்ளன.

இக்கலந்துரையாடலின் அடிப்படையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அமைச்சராகக் கொண்ட தேசியகொள்கைகள் பொருளாதார அபிவிருத்தி, மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சினுடைய முன்னெடுப்பில் ஏலமிடும் கட்டடத்தொகுதி, எரிபொருள் நிலையம், வலை பின்னும் நிலையம் உட்பட சில உடனடித் தேவைகளை நிறைவு செய்வதற்கு உடனடியாக 33.83 மில்லியன் ரூபா கிரயத்தில் இக் கருத்திட்டம் அனுமதிக்கப்பட்டு அமுலாக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம் மாவட்ட செயலாளர் ஊடாக யாழ்.பிரதேச செயலகத்தின் மூலம் அமுல்படுத்தப்படவுள்ளது.



இக் கருத்திட்டத்தின் மூலம் குருநகர் கடற்றொழிலாளர்கள் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக வலுப்படுத்தப்படுவதுடன் கடற்றொழில் துறையினை விருத்தி செய்வதற்கு இது உதவி செய்யும். இக்கருத்திட்டம் முடிவு றுத்தப்படும் பொழுது குருநகர் பிரதேசத்தில் உள்ள கடற்றொழி லாளர்களுக்கு ஏலம் விடும் கட்ட டத்தொகுதியும் எரிபொருள் நிலையமும் மீன்வலை பின்னும் நிலையமும் வெளியீடுகளாக பெறப்படும். இக்கருத்திட்டத்தின் முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு இதனை மேலும் வலுப்படுத்துவதற்கான கருத்திட்ட வேலைத்திட்டங்கள் மீள் குடியே ற்ற புனர்வாழ்வளிப்பு வடமாகாண அபிவிருத்தி அமைச்சினால் முன் னெடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். இக்கருத்திட்டம் குருநகர் வாழ் மீன்பிடி கடற்றொழில் குடும்பங்களுக்கு ஒரு ஆரம்ப கட்ட கருத்திட்ட முன்னெடுப்பாக அமையும். மேலும் உயர் பெறு பேறுகளைக்கொண்ட கருத்திட்டத்தில் யாழ்.அருணோதயா கல்லூரி தொடர்பாக பல் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய ஒன்றுகூடல் மண்டபம் மற்றும் வகுப்பறைக ளையும் உள்ளடக்கிய இரண்டு மாடிக் கட்டடத்திற்கு 55 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

இக்கல்லூரியில் ஆயிரத் திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன் வருடாந் தம் 50க்கும் மேற்பட்ட மாண வர்கள் மருத்துவத்துறை, பொறி யியற் துறை, வர்த்தகத்துறை மற் றும் கலைத்துறை போன்ற பல் கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். அத்துடன் க.பொ.சா/த பரீட்சையில் 80 வீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் சித்தி அடையும் வீதத்தினை பெற்று மாகாண தேசிய மட்டத்தில் சாதனைகளை படைக் கின்றனர். பாடசாலை நிகழ்வுகள் மாலை நேரங்களில் திறந்தவெளி அரங்கில் நடத்துவதனால் அசௌகரியங்களை எதிர் நோக்கும் மாணவர்களுக்கு இக் கட்டடமானது அவர்களின் திறமைகளை வெளிப் படுத்துவதற்கான ஒரு வசதிப்படுத் தலாக அமையும் என பாடசாலை ஆசிரியர்களும் நலன்விரும்பிகளும் விரும்புகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். உயர் விளை திறன் கொண்ட கருத்திட்டங்க ளில் தெல்லிப்பழை பிரதேச செய லகத்தில் அமைந்துள்ள தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலையை மேம்படுத்தும் வேலைத்திட்டத் திற்கு 56 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில்வைத்திய உபகரணங்களுக்கும், சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் நோயியல் ஆய்வுகூட புனரமைப்பு, குழந்தை பிரசவிப்புப் பகுதிக் கான வசதிகளும் விரிவாக்கல்களும் சாப்பாட்டு அறை அமைத்தல் மற்றும் நோயாளர் பிரிவு, மகப்பேற்றுப் பிரிவு, பெண் நோயியல் பிரிவு உட்பட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்மாவட்ட இளைஞர் ஆளுமை விருத்திக்கான கட்டடத் தொகுதிகளும் வசதிகளுக்குமான வேலைத் திட்டத்திற்கு ரூபா 50 மில்லியன் நிதி தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் அனுமதிக்கப்பட்டிருப்பதுடன் இதில் தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கான மாவட்ட அலுவலகம், இளைஞர் பயிற்சி நிலையம், இளைஞர் விளையாட்டுத்திடல், இளைஞர்களுக்கான உள்ளகபயிற்சி வசதிகள், இளைஞர் கலாசார மண்டபம் உள்ளடங்கலாக 11,000 இளைஞர்களுக்கு வசதிப்படுத்தும் வேலைத்திட்டமாக இது அமைவது குறிப்பிடத்தக்கது. யாழ்.மாவட்ட இவ் இளைஞர் ஆளுமை அபிவிருத்திக்கான கட்டடத் தொகுதியானது சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் அமையவுள்ளது எனவும் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்(இ-7)


## மணிவிழா வாழ்த்து

திருமதி றஸீனா செல்வதி சிவபாலன்

(Spe.Trd.in. Home Eco,SLTS-I)

யா/ நவாலி மகா வித்தியாலயத்தில் மனைப் பொருளியல் ஆசிரியராக கடமையாற்றி அகவை அறுபதை நிறைவு செய்து இன்று (20.05.2019) திங்கட்கிழமை



சேவையிலிருந்து ஓய்வுபெற்று மணிவிழாக்காணும் **திருமதி.றஸீனா செல்வதி சிவபாலன்** அவர்கள் தமது ஓய்வுக்காலத்தில் அனைத்து நலன்களும் பெற்று மகிழ்வோடும் புகழோடும் சிறப்புடன் வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ நவாலி மகா வித்தியாலயம்.**

(8832)


# மின்சாரத்தை பயன்படுத்தும் போது அவதானமாக செயற்பட வேண்டும்

## பொதுமக்களிடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக, மின்சாரத்தை பயன்படுத்தும் போது அவதானமாக செயற்பட வேண்டும் என மின்சக்தி அமைச்சு பொதுமக்களிடம் கோரியுள் ளது.


அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஷன குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மழைவீழ்ச்சி குறைவடைந்து, வரட்சியான காலநிலை நிலவுகிறது.

தற்போதைய நிலையில், மின்சாரத்தை வீண் விரயம் செய்வதைத் தவிர்த்து, மிக அவதானத்துடன் பயன்படுத்த வேண்டும்.

இதனூடாக தற்போது ஏற்பட்டுள்ள சவாலை வெற்றிகொள்வதற்கு தமக்கு உரிய ஒத்துழைப்பை வழங்குமாறு மின்சக்தி அமைச்சின் பேச்சாளர் பொதுமக்களிடம் கோரியுள்ளார். (இ-7)

# ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் ஆவணம் கையளித்த ஞானசாரர்



(கொழும்பு)

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர்பான முக்கிய ஆவணங்களை ஞானசார தேரர், ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளார் என தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரரைச் சந்தித்துப் பேசினார்.

இரகசியமான முறையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு நீண்ட நேரமாக, சிறைச்சாலை வைத்தியசாலையின் ஜெயிலர் அறையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு குறித்து பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதான, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், ஜனாதிபதிக்கும் ஞானசார தேரரும் இடையில் 45 நிமிடங்கள் தனிப்பட்ட கலந்துரையாடல் இடம்பெற்றது. இங்கு பேசப்பட்ட விடயங்கள் முழுமையாக எனக்கு தெரியாது.

எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை குறித்து அதிகம் பேசப்பட்டது.

கடந்த காலங்களில் பொதுபல சேனா அமைப்பால் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் தொடர்பில் பெற்றுக் கொண்ட தகவல்கள் குறித்து ஜனாதிபதிக்கு, ஞானசார தேரர் தெரியப்படுத்தியுள்ளார்.

இதேவேளை பயங்கரவாத அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு மற்றும் ஐ.எஸ். ஐ.எஸ்.பயங்கரவாதிகள் தொடர்பான முக்கிய ஆவணங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பின் போது ஞானசார தேரரின் விடுதலை குறித்தும் பேசப்பட்டுள்ளது. மீண்டும் வந்து சந்திப்பதாக ஞானசார தேரரிடம் , ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக டிலாந்த விதானகே தெரிவித்தார். (இ-7)

# வாக்காளர் எண்ணிக்கையை அதிகரிக்க முன்வாருங்கள்

## திலகராஜ் எம்.பி.கோரிக்கை



(லிந்துலை)

ஒரு மாவட்டத்தின் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போதே, அந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் தெரிவித்துள்ளார்.

லிந்துலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாவட்டங்கள் தோறும் வாக்காளர் படிவங்களை பூரணப்படுத்தி உரிய திகதியில் கிராம உத்தியோகத்தரிடம் கையளிப்பதற்கு அரசியல் செயற்பாட்டாளர்கள் முன்வரவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# இலங்கை ரயில் சேவைக்கென கொள்கலன்கள் இறக்குமதி

(கொழும்பு)

இலங்கை ரயில் சேவைக்கு எரிபொருள் ஏற்றிச் செல்லும் கொள்கலன்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதன்படி 160 கொள்கலன்கள் பயன்பாட்டில் விடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கொள்கலன் ஒன்றின் பெறுமதி 85 ஆயிரம் டொலர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சஹ்ரானின் மரபணு பரிசோதனை அறிக்கை நாளை வெளியீடு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவன் சஹ்ரான் ஹாசிமின் மரபணு அறிக்கை நாளை வெளியிடப்பட உள்ளது.

இது சம்பந்தமான பரிசோதனை நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதாக அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

# மட்டக்களப்பில் வெசாக் வாரம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலை தாக்குதலை தொடர்ந்து சோபையிழந்து காணப்பட்ட மட்டக்களப்பு நகரம் வெசாக் வாரத்தை முன்னிட்டு புத்தெழுச்சி பெற்றுவருகின்றது.

தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தின் ஏற்பாட்டில் தானசாலையொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு தலைமையக பொறுப்பதிகாரி டி.ஹெகவத்துற தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் கபில ஜயசேகர, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மெண்டிஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது விருந்தினர்களாக தீப ஒளியேற்றப்பட்டு வெசாக் வாரம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. (இ-7)

# கொழும்பு அந்தோனியார் ஆலய சீசீரிவி கமரா கருவிகள் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம்

கொழும்பு - கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலய சீசீரிவி கமராக்கள் தொடர்பில் தற்போது புதிய தகவல் வெளியாகியுள்ளது.

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடைபெற்ற போது அருட்தந்தை ரோய் மரியரட்ணம் திருப்பலி பூசையை ஒப்புக் கொடுத்திருந்தார். இந்நிலையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில்,

கேள்வி - குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற இடங்களில் சீசீரிவி கமரா மூலம் பதிவு செய்த காட்சிகளை உடனே வெளியிட்டு வீட்டார்கள்.

ஏன் இதுவரையில் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற சம்பவம் பற்றி எதனையும் வெளியிடவில்லை. அங்குள்ள சீசீரிவி கமரா செயலிழந்ததாகவும் கூறப்படுகின்றமை உண்மையா?

பதில் - குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் அனைத்து சீசீரிவி கமரா கருவிகளையும் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளுக்காக எடுத்து சென்று விட்டனர் என தெரிவித்துள்ளார். (இ-7)

# 500 பேர் கைது

(கொழும்பு)

இம்முறை வெசாக் உற்சவ தினத்தையொட்டி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 500 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளதாக கலால் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதியிலிருந்து நேற்று வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது, 500 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# திருகோணமலையிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி



(திருகோணமலை)

திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட தமிழ் சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் இளைஞர்களின் ஏற்பாட்டில் மாவட்டத்தில் 40க்கும் மேற்பட்ட இடங்களில் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் முள்ளிவாய்க்கால் பகுதியில் கஞ்சியை உணவாக உட்கொண்ட நினைவை மீட்டும் வகையிலேயே இவ்வாறு கஞ்சி வழங்கப்பட்டது.

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களது 10ஆவது ஆண்டை நினைவுகூரும் நிகழ்வாக இது முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள் கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலும் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியல்வாதிகள் குறித்து தகவல்களை வெளியிட்ட மாகந்துரே மதூஷ்

முக்கிய அரசியல்வாதிகள் பலருக்கு பெரியளவில் உதவிகளை செய்ததாகவும், அவர்கள் தனக்கு உதவாமல் கைவிட்டதாகவும் பாதாள உலகக்குழு தலைவர் மாகந்துரே மதூஷ், பொலிஸார் நடத்திய விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

சில அரசியல்வாதிகளுக்கு பணம் கொடுத்ததாகவும் சிலருக்கு தேர்தல் நேரங்களில் உதவியதாகவும் அவர் தெரிவித்தார்.

மாகந்துரே மதூஷ் தனது அரசியல் தொடர்புகள் குறித்து பல தகவல்களை வெளியிட்டுள்ளார். பல முக்கிய தகவல்களை அவர் வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது. கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த தென்பகுதியை சேர்ந்த முக்கிய அரசியல்வாதிகள் மதூஷ்உடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சில அரசியல்வாதிகள் டுபாய் சென்று மாதுஷை சந்தித்து பல உதவிகளை பெற்றுக் கொண்டதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (இ-7)

# படைப்புழுவால் பாதிக்கப்பட்ட 95 விவசாயிகளுக்கு நட்டஈடு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு, மண்டபத்தடி விவசாய விரிவாக்கல் பிரிவில் படைப்புழு தாக்கத்தால் சோளம் செய்கை முழுமையாக பாதிக்கப்பட்ட 95 விவசாயிகளுக்கு முதற்கட்டமாக நட்டஈடு வழங்கப்பட்டது.

இதன்போது, குறித்த 95 விவசாயிகளுக்கும் 18 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.


சோளம் செய்கையில் படைப்புழு தாக்கத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய விவசாயிகளுக்கு இரண்டாம் கட்டமாக நட்டஈடு விரைவில் வழங்கி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடந்த வருடம் மட்டக்களப்பில் சோளம் செய்கையில் படைப்புழுவின் தாக்கத்தால் நூற்றுக்கணக்கான ஏக்கர் சோளம் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2019 - 15.06.2019

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**






விகாரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே குரு பகவான் உங்கள் இராசியில் அதிசார கதியில் இயங்குகிறார். அவரது பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகிறது. ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும் என்பது பழமொழி. எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். மகத்தான வெற்றி கிடைக்கும். கற்றவர்களும், மற்றவர்களும் பாராட்டும் அளவிற்கு கனிவாக நடந்து கொள்வீர்கள். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

உங்கள் இராசியிலேயே சனி, கேது ஆகிய கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. அவை இரண்டும் குருவோடு இணைந்திருப்பதால் கடுமைகள் குறையும். சனிபகவான், தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்குபவர். அவர் உங்கள் இராசியிலேயே பலம்பெற்றுச் சஞ்சரிக்கும் பொழுது தேங்கிய காரியங்கள் அனைத்தும் சுறுசுறுப்பாக நடைபெறும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். அதிக உழைப்பால் இதுவரை பலன் பெற்ற நீங்கள், இப்பொழுது சிரமம் இன்றி வெற்றிபெறுவீர்கள்.

கேது பலம் பெற்றிருப்பதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். இதுவரை இருந்த ஏற்ற இறக்க நிலை இனி மாறும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைப்பதோடு, உங்களுக்கும் அதேபோல் பதவிகள் கிடைக்க வாய்ப்புகள் கைகூடிவரும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். பஞ்சம விரயாதிபதியான செவ்வாய் 7 இல் இருப்பதால் பிள்ளைகளால் விரயம் ஏற்படலாம். இருப்பினும் அவை நல்ல விரயங்களாக அமையும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள, நண்பர்கள் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும்.

ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் உங்களுக்கு நடைபெறுகிறது. முதல் சுற்றும், மூன்றாவது சுற்றும் நடைபெறுவதால் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. இருப்பினும் மந்தன் செய்யுமளவிற்கு மகேஸ்வரன் கூடச் செய்யமாட்டான் என்பது பழமொழி. எனவே நீங்கள் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற மந்தன் வழிபாட்டையும் மேற்கொள்ள வேண்டும்.

இந்த மாதம் வைகாசி விசாகத் திருநாள் வருகிறது. அன்றைய தினம் கந்தன் வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும்.

விருச்சிக குருவின் சஞ்சாரம்

மே 18 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு வக்கிர

### குழப்பங்களைத் தீர்க்கும் குருவின் பார்வை

இயக்கத்தில் குருபகவான் வருகிறார். இதன் விளைவாக குருபகவான் 4, 6, 8 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளுக்கு மாற்றினத்தவர்கள் உறுதுணையாக இருப்பர். இடம், பூமி, வாங்கிச் சேர்க்கும் எண்ணம் உருவாகும். கடன்சுமை குறையும். கட்டிய வீட்டைப் பழுதுபார்க்கும் யோகம் உண்டாகும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டுவந்து சேர்ப்பர். உத்தியோகம் சம்பந்தமாக ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அதில் அனுகூலங்கள் கிடைக்கும். சக பணியாளர்களின் தொல்லை அகலும்.

மிதுன புதனின் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்குப் புதன் செல்கிறார். மிதுன இராசி புதனுக்குச் சொந்த வீடாகும். எனவே வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். வாழ்க்கைத் துணையின் உடல்நலம் சீராக மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வது நல்லது. வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும் இந்த நேரத்தில், எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிர் பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் வருமானம் கிடைக்கும். வெளிநாட்டில் பணிபுரிய வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர்களுக்கு அழைப்புகள் வந்து சேரும்.


ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூன் மாதம் 4 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். சுக்கிரனுக்கு அது சொந்த வீடாகும். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கு அதிபதி 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அலுவலகப் பணிகள் துரிதமாக முடியும். வாங்கிய கடனைக்கொடுக்க வாய்ப்புகள் தானாக வந்து சேரும். எதிரிகளின் பலம் குறையும். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்திற்கும் அதிபதியாகச் சுக்கிரன் விளங்குவதால் பயணங்களில் ஏற்பட்ட தடைகள் அகலும். பதவி உயர்வும் பரிசீலனை செய்யப்படும். இடமாற்றங்கள், இனிய மாற்றங்களாக அமையும். பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் நினைத்தது போலவே நிறைவேறும். அனைத்துக் காரியங்களில் வெற்றி கிடைக்கும் நேரமிது.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவை வழிபாடு செய்வது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் இனிய சம்பவங்கள் நிறைய நடைபெறும். பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். பணப் பிரச்சினைகள் தீரும். முக்கியப் புள்ளிகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். நல்ல சந்தர்ப்பங்களை நழுவவிட வேண்டாம். கணவன் - மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியத் தொல்லை மட்டும் அப்போதைக்கப்போது தலைதூக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படத்தக்கதாக அமையும். தாயின் உடல்நலம் சீராகும். தந்தைவழி ஆதரவும், சகோதரர் ஒத்துழைப்பும் திருப்தி தரும். புதிய உத்தியோகத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வரலாம். குலதெய்வ வழிபாடும், விசாகத்தன்று குமாரக் கடவுள் வழிபாடும் கூடுதல் நற்பலன் தரும்.






விகாரி வருட வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி பகவான் விரயஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு கூட குருவும், கேதுவும் இணைந்திருக்கிறார்கள். மூன்று கிரகங்கள் பலம் பெற்று விரய ஸ்தானத்தில் இருப்பதால், வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும். வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும் என்றாலும் மனக்கவலை இருக்கத்தான் செய்யும். சிலருக்கு உதவப்போய் அது உபத்திரவமாய் முடியும். உடல் நிலை பாதிப்புகளும், அதனால் மருத்துவச் செலவுகளும் உண்டு. ஊர்மாற்றம், இடமாற்றம் செய்தும் திருப்தி இல்லையே என்று கவலைப் படுவீர்கள். உறவினர்கள் பகை உருவாகலாம்.

இத்தகைய நிலை ஏற்படக் காரணம், ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவது தான். நீங்கள் எவ்வளவு தான் சிக்கனமாக இருந்தாலும் விரயங்களே அதிகரிக்கும். எனவே இதுபோன்ற காலங்களில் நன்மைதரும் விதத்தில் வரும் விரயங்களை மேற்கொள்வது நல்லது. இல்லம் கட்டிக்குடியேறும் எண்ணம் இருப்பவர்களுக்கு அது கைகூடும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்கும் வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளலாம். டி.வி, மிக்ஸி, கிரைண்டர், கணனி, ஏசி போன்ற மின்சாதனப் பொருட்கள் போன்றவற்றை வாங்குவதிலும் ஆர்வம் காட்டலாம். தேவைக்கேற்ற பணம் இல்லையே என்று கவலைப்பட வேண்டாம். காரியத்தை தொடங்கிவிட்டால் பணம், தானாக வந்து சேரும்.

குருபகவான் வக்கிரத்தில் இருப்பது ஒரு வழிக்கு நன்மை தான். விரயாதிபதி வக்கிரம் பெறும்பொழுது தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். செவ்வாயின் பார்வை விரய ஸ்தானத்தில் பதிவதால் ஒரு சிலருக்கு இட விற்பனையால் தனலாபம் கிடைக்கும். நீண்ட நாட்களுக்கு முன் வாங்கிப் போட்ட நிலம் அல்லது இடம் போன்றவற்றை நல்ல விலைக்கு விற்கக்கூடிய அமைப்பு உருவாகும். சொத்து விற்பனையின் மூலம் வரும் தன லாபத்தைக் கொண்டு கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிகப் பொறுப்புகளும், சுமைகளும் கூடும். ஆனால் எவ்வளவு தான் சிறப்பாகப் பணி புரிந்தாலும் மேலிடத்தில் நல்ல பெயர் கிடைப்பது அரிது. பொதுவாக வஸ்திரதானம், அன்னதானம், சொர்ணதானம் போன்றவற்

### யோசித்துச் செயற்பட்டால் யோகம்

றைச் செய்வதன் மூலமும், சனி பகவானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு வருவதன் மூலமும் மன அமைதி கிடைக்கும்.

இந்த மாதம் வைகாசி விசாகத் திருநாளில் முருகப் பெருமானை முறையாக வழிபட்டால் வளர்ச்சி அதிகரிக்கும்.

விருச்சிக குருவின் சஞ்சாரம்

மே 18 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு குரு வக்கிர இயக்கத்தில் வருகிறார். அப்பொழுது அதன் பார்வை 3, 7, 5 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். பழைய கடனைத் தீர்க்க புதிய வழிபிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் உதவியால் முன்னேற்றம் ஏற்படும். பிள்ளைகள் வழியில் வந்த பிரச்சினைகள் அகலும். பிடிவாதப் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரமிது. பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். தூர தேசத்தில் இருந்து வரும் செய்தி ஆதாயம் தருவதாக அமையும். தொழில் ரீதியாக நீங்கள் எடுத்த முயற்சிகளுக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். நாடு மாற்றங்களும், நலம்தரும் விதத்தில் உத்தியோக மாற்றங்களும் கிடைக்கும் நேரமிது.

மிதுன புதனின் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, புதனால் அற்புதமான பலன் கிடைக்கும். அரசுவழி வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பஞ்சாயத்துக்கள் சாதகமாகும். எதிரிகள் விலகுவர். இலாகா மாற்றங்கள் இனிமை சேர்க்கும். புதன் 9ஆம் இடத்திற்கும், அதிபதியானவர். எனவே பெற்றோர் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் யோகமும் உண்டு.

ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜூன் மாதம் 4 ஆம் திகதி ரிஷப இராசிக்கு செல்கிறார். பாக்ய ஸ்தானாதிபதி பாக்ய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் புதிய வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். ஒப்பந்தங்களில கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்திரவாதம் கிடைக்கும். தங்கம், வெள்ளி வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். சொத்துக்கள் வாங்குவதற்கு உகந்த நேரமிது.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆதியந்தப்பிரபுவை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் கொஞ்சம் விரயங்கள் அதிகரிக்கும். இருப்பினும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உண்டு. பயணங்கள் அதிகரிக்கும். மாதத் தொடக்கத்தில் ஆதாயம் தரும் தகவல்கள் அதிகமாக கிடைக்கலாம். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துச் செல்வது நல்லது. தாய்வழி ஆதரவு திருப்தி தரும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம் தான். கடன் சுமை குறைவதுபோல தோன்றினாலும், மீண்டும் கடன்கள் தலைதூக்கலாம். பணி புரியும் பெண்களுக்கு பக்கத்தில் பணிபுரிபவர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நேரமிது. குடும்ப விடயங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். விசாகத்தன்று முருகப் பெருமானையும், சனிக்கிழமையன்று அனுமனையும் வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்திற்கு இலங்கையிலுள்ள அரசியலமைப்பும் காரணம்

## தென்னிந்திய திருச்சபையின் பேராயர் சுட்டிக்காட்டு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்திற்கு இலங்கையிலுள்ள அரசியலமைப்பும் காரணம் என தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதி.வண.கலாநிதி டானியல் செல்வரத்தினம் தியாகராஜா சுட்டிக்காட்டியுள்ளார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த ஊடக சந்திப்பு நேற்று ஞாயி ற்றுக்கிழமை கிளிநொச்சியில் உள்ள ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு இலங்கையில் உள்ள அரசியலமைப்பும் காரணமாக உள்ளது. ஜனாதிபதி ஒரு கட்சியும் பிரதமர் ஒரு கட்சியுமாகவுள்ள நிலையில் இருவருக்கும் இடையில் புரிந்துணர்வு இல்லாமையால் இவ்வாறான தாக்கு தல் சம்பவத்திற்கு வலுச்சேர்த்ததாகவும் முதலில் இருவருக்கும் இடையில் ஓர் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். குறித்த தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து ஒரு சமூகத்தின் மீது ஒரு பக்கச்சார்பான குற்றச்சாட்டுகளை முன்வைக்கக் கூடாது. உண்மையில் குறித்த தாக்குதல் இஸ்லாமிய இனத்தை சேர்ந்தவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக ஒட்டுமொத்த இஸ்லாமியர்களிற்கும் கிறிஸ்தவர்களிற்கும் இடையிலான மோதலாக பார்க்க முடியாது. இஸ்லாமிய சமூகத்தினர் மீது வன்முறைகளை மேற்கொள்வதும், அவர்களை குற்றவாளிகளாக பார்ப்பதும் பொருத்தமற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

மூன்று தசாப்தகால யுத்தம் நிறைவுற்று அமைதியான சூழல் ஏற்பட்டிருந்த நிலையில், அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் இலங்கையை பாதித்துள்ளது. சமாதான சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கை ரூபாவின் பெறுமதியும் வீழ்ச்சி அடைந்துள்ளது. வெளிநாட்டவர் வருகை உள்ளிட்ட பல்வேறு பாதிப்புக்கள் இலங்கை பிரஜைகளாக அனைவரையுமே தாக்கத்தை செலுத்துகின்றது. இந்த நிலையில் பல்லின சமூகத்தவர்களாக நாம் ஒற்றுமையை கட்டியெழுப்ப வேண்டும். இனங்களிற்கிடையிலும், சமயங்களிற்கிடையிலும் நல்லிணக்கப்பாட்டினை கொண்டு வரவேண்டும். பாதிக்கப்பட்ட அனைத்து மக்களிற்கும் இலங்கை பிரஜைகளாக உதவ முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் முடிந்த பின்னர் ஆராய்வதை பார்க்கிலும், இனி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதவாறு பார்க்க வேண்டும். அயல் நாடான இந்தியா உள்ளிட்ட நாடுகளின் புலனாய்வு தகவல்களை வைத்தாவது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். இலங்கையில் இடம்பெற்ற தாக்குதலிற்கு இலங்கை புலனாய்வு பிரிவில் காணப்பட்ட குறைபாடும் காரணம் எனவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டினார். தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே புலனாய்வு தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும், அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, இந்தத் தாக்குதல் ஒரு சமூகத்தை இலக்குவைத்தல்ல. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிற்கிடையிலான புரிந்துணர்வற்ற நிலை, பாதுகாப்பு பிரிவில் காணப்பட்ட குறைபாடுகள் இத்தாக்குதலிற்கு வழிவகுத்துள்ளது. அன்றைய தினம் இடம்பெற்ற தாக்குதல் கிறிஸ்தவர்களை மாத்திரம் இலக்கு வைத்ததல்ல. அதிகளவானோரை கொல்ல வேண்டும் என்பதே அன்றைய தினம் இலக்காக்கப்பட்டுள்ளது. நாட்டில் தீவிரவாதம், பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும். அதேவேளை இனங்களிற்கிடையில் சமாதானம் வளர்க்கப்பட வேண்டும்.

சமயத் தலைவர்கள் மாத்திரமே சமாதானத்தின் அடையாளமாக அறிக்கைகள், கருத்துக்கள் ஊடாக கருத்துக்களைப் பதிவு செய்கின்றனர். ஆனால் குறித்த சமாதானத்தின் அல்லது நல்லிணக்கத்தின் இணக்கப்பாடு அடிமட்டம் வரை செல்ல வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (7-312)






### றிசாத்திற்கு எதிரான

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க வேண்டும்

## மன்னார் மாவட்ட தமிழரசுக்கட்சி கூட்டத்தில் தீர்மானம்

கடந்த வாரம் கூட்டு எதிர் கட்சியால் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் கைத்தொழில் வணிக வர்த்தக அமைச்சருமான றிசாத் பதியுதீன் மீது முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என மன்னார் மாவட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



அண்மையில் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தை மேலும் நீட்டிப்பதற்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாகவும் எவ்வாறு பாராளுமன்றத்தில் தீர்மானம் மேற்கொள்வது தொடர்பாக மன்னார் மாவட்ட தமிழ் அரசு கட்சி உயர்மட்ட குழுவின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் போது தற்போது அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தினால் தமிழ் மக்கள் திட்டமிட்டு பழிவாங்கப்படுவதனாலும் பல்கலைக்கழக மாணவர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள் மீது திட்டமிட்டு குற்ற நடவடிக்கைகள் எடுப்பதனாலும் நிச்சயமாக அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க வேண்டும் என ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அவசரகாலச் சட்டம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவு இல்லாவிட்டாலும் பாராளுமன்றத்தில் நிச்சயம் வெற்றி பெறும். ஆனாலும் இவ் அவசரகால நிலைமையினை பயன்படுத்தி எமது மக்கள் பழிவாங்கப்படுகின்றனர். எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணையின் காலப்பகுதி ஒரு மாதமாகும்.

அக் காலப்பகுதி நிறைவடைந்த பின்னர் மீண்டும் பாராளுமன்றத்தில் இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் போது அதற்காக ஆதரவை வழங்குவதா இல்லை என எமது மன்னார் மாவட்ட உயர் மட்ட குழு தீர்மானித்துள்ளது.

அதே நேரத்தில் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட ஒருவரை விடுவிப்பதற்காக அமைச்சர் றிசாத் பதியுதீன் மூன்று தடவை இராணுவத்தளபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதால் அவர் மூலமாக மன்னார் மாவட்டத்தில் சட்ட ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அதே நேரத்தில் அண்மையில் தாராபுரபகுதியில் அமைச்சருக்கு சொந்தமான விடுதியில் சந்தேகத்திற்கு இடமான இலக்கத் தகடு கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனாலும் குறித்த இலக்கத் தகடானது இலங்கை மோட்டார் வாகன அமைப்புனால் (RMP) விநியோகிக்கப்படவில்லை எனவும் ஏதோ ஒரு வகையில் தவறான நடவடிக்கைகாகவே குறித்த இலக்கத் தகடு பயன்பட்டிருக்கலாம் எனவும் இது தொடர்பான முழுமையான விசாரணைகள் நடத்துவதற்காகவாவது அவர் மீது கொண்டுவரப்படுகின்ற நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து அவருக்கு இந்த தற்கொலை குண்டுதாக்குதலுக்கும் தொடர்பு உள்ளதா? இல்லையா? என்பது தொடர்பாகவும் குறுகிய காலத்தில் அவர் எவ்வாறு செல்வந்தராக வந்தார் என்பது தொடர்பாகவும் விசாரிக்கவேண்டும் என்பதாலேயே குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று தெரிவித்ததுடன் ஏகமனதாகத் தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது. (7-285)

### முள்ளிவாய்க்கால் நினைவு பிரார்த்தனை







(குருமன்காடு)

வவுனியா சகாயமாதபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாக சபையினர், சமூகஆர்வலர்கள் அமைப்பு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவுப் பிரார்த்தனை நிகழ்வு நேற்று முன்தினம் காலை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி செய்யப்பட்டதுடன் ஆத்மசாந்திப் பிரார்த்தினையும் இடம்பெற்றது. இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் கணவனை இழந்த மற்றும் பிள்ளைகளை இழந்த 10 குடும்பத்தினருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. உப்பில்லாக் கஞ்சியும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், சமூகஆர்வலர்கள், ஆலய நிர்வாக சபையினர், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (7-9-250)

# சமாதானம் ஏற்பட வேண்டி பள்ளிவாசலில் பிரார்த்தனை



நாட்டில் கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற தீவிரவாத செயற்பாட்டிற்கு எதிராகவும் நாட்டில் சிறுபான்மை சமூகங்களுக்கு குரல்கொடுக்கும் அமைச்சர்களுடைய பாதுகாப்பை வேண்டியும் வவுனியா பட்டகாடு பகுதியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் தக்வா பள்ளிவாசலில் கடந்த 17 ஆம் திகதி மாலை விசேட பிரார்த்தனை இடம்பெற்றது.

நாட்டில் ஓர் சமாதானம் ஏற்பட வேண்டும் குறிப்பாக தமிழ் , முஸ்லிம் , சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் குறித்த பிரார்த்தனை இடம்பெற்றது.

பள்ளிவாசலின் தலைவர் எ.ஆர்.எம் லரீபின் தலைமையில் இடம்பெற்ற இந்த பிரார்த்தனையில் வவுனியா நகர பள்ளிவாசல் நிர்வாகிகள் , பண்டாரிக்குளம் ஜும்மா பள்ளிவாசலின் நிர்வாகிகள் , பட்டகாடு ஜும்மா பள்ளிவாசலின் நிர்வாகிகள், பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர். (7-9-250)

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வன்னிவிளாங்குளம் முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம்

## பக்தர்களின் வருகை குறைவு



(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வன்னி விளாங்குளம் பகுதியிலேயே அமைந்திருக்கின்ற வரலாற்று சிறப்புமிக்க வன்னி விளாங்குளம் முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 17 ஆம் திகதி அன்று இடம்பெற்றது.

நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளை தொடர்ந்து பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கும் நிலைமையிலே ஆலய வளாகத்தை சுற்றி இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டு இராணுவம்,பொலிஸார்,சிவில் பாதுகாப்புப் படையினரால் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அனைவரும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு ஆலயத்திற்கு அனுமதிக்கப்பட்டு ஆலய வழிபாடுகள் சிறப்புற இடம்பெற்ற இருப்பினும் வழமையைவிட இம்முறை ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

ஆலய வளாகத்தில் வியாபார நிலையங்களும் பெரிதாக அமைக்க அனுமதிஅளிக்கப்படவில்லை என்பதும் உணவகங்கள், கச்சான் வியாபாரிகளுக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. (7-9-250)

# வீதி அபிவிருத்தி வேலைகள் ஆரம்பம்



(மன்னார் )

மன்னார் சாவற்கட்டு பகுதியில் உள்ள கில்லறி வீதி அபிவிருத்திக்கு என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளக வீதி அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட 20 மில்லியன் ரூபாய்க்கான வேலைத்திட்டங்கள் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் சாவற்கட்டு நகர சபை உறுப்பினர் தலைமையில் கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது


குறித்த வேலைத்திட்டமானது ஒரு மாத காலப்பகுதிக்குள் நிறைவு பெற்று மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (7-285)

## 100 வது ஜனன தினம்

வைத்திய சிரோன்மணி அமரர் க.பொன்னம்பலத்தின் 100 ஆவது ஜனனதினம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நீராவியடிப் பகுதியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபை மண்டபத்தில் பூநகரிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜயம்பிள்ளை தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பிரதி வடமாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் வைத்தியர் ப.சுரேஷன் கலந்து கொள்வார். (7-10-84)

# நாயாறு பகுதியில் இறந்து மிதக்கும் மீன்கள் நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் கோரிக்கை



மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு நாயாத்து வெளி நாயாறு பகுதியில் கடலில் கலக்கும் ஆற்றில் கடந்த இரு தினங்களாக இலட்சக்கணக்கான மீன்கள் இறந்து மிதப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் தொடக்கம் குறித்த ஆற்றுக்கு சற்றுத் தொலைவில் இறால் வளர்ப்புப் பண்ணை ஒன்று நிறுவப்பட்டு மிக வேகமாக வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் குறித்த வளர்ப்புப் பண்ணைக்கு நாயாற்றிலிருந்து நீரை எடுக்கும் நோக்கோடு வாய்கள் வெட்டப்பட்டு குழாய் மூலம் நீரை இறைத்துள்ளமை குறித்த ஆற்றில் மீன்கள் இறப்பிற்கு காரணமாக இருக்கலாம் என மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான வீதி, நாயாற்று பகுதியில் உள்ள ஆற்றிலே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக விடத்தல் தீவு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கரையோர பாதுகாப்புத் திணைக்களம், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், நீர்பாசனத் திணைக்களம், மாந்தை மேற்கு பிரதேசச் செயலகம் உட்பட உரிய திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தவுள்ளதுடன், மன்னார் நீதவான் நீதிமன்றிற்கும் குறித்த சம்பவம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக விடத்தல்தீவு மேற்கு மீனவர் கூட்டுறவு சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இறந்த நிலையில் காணப்பட்ட பல ஆயிரக்கணக்கான மீன்கள் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதோடு ஆற்றினுள்ளும் பல இலட்சம் மீன் குஞ்சுகள் மிதந்து காணப்படுகின்றது. குறித்த பகுதி குஞ்சுகள் பொரித்து செல்லும் ஓர் இடமாகவே காணப்படுகின்றது என்றும் பல வருடங்களாக மீன் குஞ்சுகள் இவ்வாறு இறந்து காணப்பட்டதாக சரித்திரமே இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இதை ஆய்வுக்குட்படுத்த வேண்டுமென மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் தமது வாழ்வாதாரம் இதன் காரணமாகவே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட விடத்தல் தீவு மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (9-285)

# முள்ளிவாய்க்கால் நினைவாக உப்பில்லா கஞ்சி



முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஆளுநரின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையில் முள்ளிவாய்க்கால் மண்ணை இறுதி யுத்தத்தின் போது மக்கள் உண்ட உப்பில்லா கஞ்சி நேற்று முன்தினம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பள்ளமடு பகுதியில் பொது மக்கள் அனைவருக்கும் கஞ்சி வழங்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்கள் நினைவாக மன்னார் சாந்திபுரம் பாடசாலை மற்றும் ஈச்சலவாக்கை பொது மண்டபம் பகுதியில் மரம் நாட்டியும் வைக்கப்பட்டது.

இலங்கை முழுவதும் குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதிகள் முழுவதும் பாடசாலைகள்,பொது இடங்கள்,ஆலயங்கள் என தெரிவு செய்யப்பட்ட இடங்களில் முள்ளிவாய்க்கால் மண்ணில் இறந்த மக்களின் நினைவாக என சுமார் 5000 மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9-250)

# அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நிறைவு செய்ய நடவடிக்கை

பேரே வாவி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை இவ்வருட இறுதியில் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வாவியை சுற்றி பயணிக்கக்கூடியவாறு பாதையொன்றை அமைக்க எதிர்பார்த்துள்ளதாக அதன் தலைவர் ஜகத் முனசிங்க தெரிவித்தார்.

அதேபோல் , குறித்த அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக வாவியினை சுற்றியுள்ள அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்றவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (7)




## பாரதம்

# சீமான் தலைமையில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்








(சென்னை)

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலையின் 10 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் தமிழர் தாயக பிரதேசங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில், நாம் தமிழர் கட்சியின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு சென்னையில் உள்ள கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர்சீமானினால்ஈகச் சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (7)

# கேதார்நாத் குகையில் பிரதமர் மோடி தியானம்



(டில்லி)

உத்தரகாண்ட் கேதார்நாத் குகையில் பிரதமர் நரேந்திர மோடி தியானம் செய்து வருகிறார்.

பாராளுமன்ற இறுதிக்கட்ட தேர்தல், நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதற்கான பிரசாரம் நேற்று முன் தினம் மாலை முடிவடைந்தது. பாராளுமன்ற தேர்தல் பிரசாரம் முடிந்த நிலையில், உத்தர காண்ட் மாநிலத்துக்கு 2 நாள் பயணமாக சென்றுள்ள பிரதமர் மோடி, கேதார்நாத் கோவிலில் வழிபாடு செய்தார்.

பின்னர் பாண்டவர்கள் தவம் செய்ததாக கூறப்படும் நதிக்கரையில் உள்ள சிறிய குகைக்குள் சென்று, காவி ஆடை அணிந்து தியானம் செய்தார். (7)

# கருவில் உள்ள குழந்தைக்கு முதுகெலும்பு சத்திரசிகிச்சை

## லண்டன் வைத்தியர்கள் சாதனை

(லண்டன்)

கருவில் இருந்த குழந்தையின் முதுகெலும்பு சரிவர அமையாததால், கருவிலேயே முதுகெலும்பு சத்திரசிகிச்சை செய்து முடித்து லண்டன் வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர்.

லண்டனில் உள்ள மேற்கு சாசெக்ஸ் பகுதியில் வசிப்பவர் ஷெர்ரி ஷார்ப் (29). திருமணமான இவர், கருவுற்று 20 வாரங்கள் கழித்து வழக்கமான பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

லண்டனில் புகழ் பெற்ற கிங்ஸ் மருத்துவ கல்லூரி வைத்தியர்கள், கருவில் குழந்தையை ஸ்கான் செய்து பார்க்கும்போது அதிர்ச்சியூட்டும் தகவலை கண்டறிந்தனர்.



ஷெர்ரியிடம், உங்கள் குழந்தையின் முதுகெலும்பு சீராக இல்லை எனவும், மற்ற குழந்தைகளை போல் நடக்க முடியாமல் போகலாம் எனவும் கூறியுள்ளனர். மேலும் சீராக அமையாத இந்த முதுகெலும்பினால் முடக்குவாதம், கால்களில் உணர்வு இழப்பு, சிறுநீர்ப்பை மற்றும் குடல் நோய் பிரச்சினைகள் என பல்வேறு விளைவுகளை குழந்தை சந்திக்க நேரிடும் எனவும் கூறினர்.

இதையடுத்து 27 வாரங்கள் ஆன நிலையில், கருவில் இருக்கும் ஜாக்சன் எனப்பெயரிடப்பட்ட அந்த குழந்தையின், குறைபாட்டினை சத்திரசிகிச்சை செய்தால் குணப்படுத்தி விடலாம் என வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் அறுவைச்சிகிச்சை நிபுணர்கள் கருவில் இருக்கும் ஜாக்சனுக்கு வெற்றிகரமாக சிகிச்சை செய்து முடித்தனர். ஷெர்ரி மற்றும் ஜாக்சன் ஆகியோருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# வான் வழித்தாக்கு...

# 17 பொலிஸா...

(காபூல்)

**ஆப்கனில் வான்வழ... இலக்கு மாறியதில் 17 ... யாகியுள்ளனர்.**

ஆப்கானில் அரசு தரப்பிற்கும், தலிபான் பயங்கரவாதிகளுக்கும் இடையே தொடர்ச்சியான மோதல் இடம்பெற்று ...

# பயங்கரவாதிகள்... பத்து மீனவர்கள்...

(அபுஜா)

நைஜீரியாவில் போகோஹராம் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 மீனவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் சில ஆண்டுகளாக நைஜீரிய அரசினை எதிர்த்து போகோஹராம் பயங்கரவாதிகள் வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அமைப்பின் தற்கொலை படையினர் நடத்திய தாக்குதல்களில் 20,000 பேர் உயிரிழந்துள்ளனர். 2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இந்த பயங்கரவாதிகளுக்கும், இராணுவத்திற்குமிடையே அடிக்கடி தாக்குதல்கள் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்று நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள சிறிய நகரமான கொண்டுகா பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் சிலர், அல்லு டாம் ...



# மோட்டார் சை... 5 குழந்தைகள்...


(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மோட்டார் சைக்கிளில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் 5 குழந்தைகள் பலியானார்கள்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் இன்னும் தலிபான் பயங்கரவாதிகளின் வெறிச் செயல்கள் முடிவுக்கு வந்தபாடில்லை. அங்கு பரவலாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் அவர்கள் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் அங்குள்ள ஹெறாத் மாகாணம், ஒபே மாவட்ட நிர்வாக அலுவலகத்தின் அருகே நேற்று மோட்டார் சைக்கிளில் பொருத்தி வைக்கப பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டு வெடித்தது. இந்த குண்டு வெடிப்பால் அந்தப் பகுதியே குலுங்கியது.

மாவட்ட தலைமை நிர்வாக அதிகாரியின் கார், சம்பவ இடத்தை கடந்து சென்றபோது குண்டு வெடிப்பு நடந்தது. அப்போது அந்தப் பகுதியில் இருந்தவர்கள் பதறியடித்துக்கொண்டு நாலா புறமும் ஓட்டம் எடுத்தனர். எனினும் இந்தக் குண்டுவெடிப்பில் 5 குழந்தைகள் ...



# வெளிநாடு

## குதலில் இலக்கு மாறியதில்
## ர் பலி; 14 பேர் காயம்

### வழித் தாக்குதலில்
### 7 பொலிஸார் பலி

வருகிறது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் தென்பகுதி ஹெல்மண்ட் மாகாணத்தில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் 17 பொலிஸார் பலியாகியுள்ளதோடு, 14 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தலிபான்களுக்கு எதிராக தாக்குதல் நடத்திவரும் அமெரிக்க படைகள் இலக்கு தவறியதால் பொலிஸாரின் முகாம் மீது தாக்கியிருக்கலாம் என ஆப்கான் அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## ள் சரமாரியாக தாக்குதல்
## ள் பரிதாபமாக உயிரிழப்பு



பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். அப்போது திடீரென அங்கு வந்த போகோ ஹராம் பயங்கரவாதிகள், மீனவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 10 மீனவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் சில மீனவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதல் குறித்து தகவல் அறிந்த இராணுவ வீரர்கள் அப்பகுதிக்கு விரைந்தனர். படுகாயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளன. (7)

## சக்கிள் குண்டுவெடிப்பு
## ள் பலி; 20 பேர் காயம்



பலியானதாகவும், 20 பேர் படுகாயம் அடைந்ததாகவும் முதல் கட்ட தகவல்களில் தெரியவந்துள்ளன.

இந்த குண்டுவெடிப்பு குறித்த தகவல் அறிந்ததும் மீட்புப் படையினரும், பாதுகாப்பு படையினரும் சம்பவ இடத்தை சுற்றி வளைத்தனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு அம்புலன்ஸில் மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் இந்த குண்டு வெடிப்பில் மாவட்ட நிர்வாக அதிகாரியின் வாகனமும், பொது மக்களின் வாகனங்களும் சிக்கி சேதம் அடைந்தன.

இந்த குண்டு வெடிப்புக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை. இருப்பினும் தலிபான் பயங்கரவாதிகள்தான் இந்த குண்டுவெடிப்பை நடத்தி இருக்கக்கூடும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

### 8 ஆண்டுகளுக்கு பின்னர்

## ஈராக் - சிரியா இடையே விமானப் போக்குவரத்து ஆரம்பம்

(பக்தாத்)

சிரியாவில் வெடித்த உள்நாட்டுப் போரால் நிறுத்தி வைக்கப்பட்ட விமானப் போக்குவரத்தை 8 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் நேற்று ஆரம்பித்துள்ளது.



சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தலைமையிலான ஆட்சிக்கு எதிராக அங்குள்ள போராளிக் குழுக்கள் ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடந்த 2011 ஆம் ஆண்டில் சிரியாவுக்கு செல்லும் விமானங்களை ஈராக் அரசு நிறுத்தி விட்டது.

இதனால் சிரியா தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் ஈராக் தலைநகர் பக்தாத் இடையிலான வான்வழித் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் பக்தாத்தில் இருந்து டமாஸ்கஸ் நகருக்கு விமானங்களை இயக்கியுள்ளது. (7)

## வெளிநாட்டு வாகனங்கள் மீதான வரி உயர்வு; 6 மாதங்களுக்கு நிறுத்தி வைக்க ட்ரம்ப் முடிவு

(வோஷிங்டன்)

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் வாகனங்கள் மீது 25 சதவீத வரிவிதிப்பு என்ற முடிவை 6 மாதங்களுக்கு நிறுத்தி வைக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.



அமெரிக்காவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு சீனா, இந்தியா, ஜப்பான், கனடா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் ஏராளமாக இறக்குமதி வரிவிதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார்.

இதற்கு பதிலடி தரும் வகையில் சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் இரும்பு, அலுமினியம் ஆகிய உலோகங்களுக்கான வரியை பன்மடங்காக உயர்த்தி அண்மையில் உத்தரவிட்டார்.

மேலும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைமதிப்பில் 25 சதவீதம் தொகையை நாங்கள் வரியாக விதிப்போம் என அவர் எச்சரித்திருந்தார். வெளிநாட்டு நிறுவனங்களின் நியாயமற்ற போட்டியால் அமெரிக்காவில் வாகன உற்பத்தி தொழில் வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்த நிலையில் இந்த புதிய வரிவிதிப்பு முறையை தற்காலிகமாக தள்ளி வைத்துள்ள ட்ரம்ப், இதுதொடர்பாக, வர்த்தக பிரதிநிதிகள் கலந்துபேசி இன்னும் 180 நாட்களுக்குள் அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளேன் என மேலும் தெரிவித்துள்ளார். (7)

## அதிவேக புல்லட் ரயில் ஜப்பானில் அறிமுகம்

(டோக்கியோ)

ஜப்பானில் மணிக்கு 320 கி.மீ. வேகத்தில் பயணிக்கக் கூடிய அதிநவீன புல்லட் ரயில் வெற்றிகரமாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஜப்பானில் அடுத்த தலைமுறைக்கான அதிநவீன ஷின்கென்சன் புல்லட் ரயிலின் தயாரிப்பினை அந்த நாட்டு கிழக்கு ரயில்வே நிர்வாகம் நிறைவு செய்துள்ளது.

இந்த புல்லட் ரயிலின் முகப்புப் பகுதி கூர்மையான மூக்கினைப் போன்று அமைக்கப் பட்டுள்ளது.

இந்த முகப்பு பகுதிக்கு 91 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளதுடன் இந்த அதிநவீன ரயில் ஒரு மணி நேரத்திற்கு 320 கி.மீ வேகத்தில் செல்லக்கூடிய திறனைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)



## பங்களாதேஷிலுள்ள ரோஹிஞ்யா அகதிகளுக்கு முதன்முறையாக அடையாள அட்டை வழங்கல்

### ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தெரிவிப்பு

(டாக்கா)

பங்களாதேஷிலுள்ள 2.5 இலட்சத்துக்கும் மேற்பட்ட ரோஹிஞ்யா அகதிகளுக்கு முதன் முறையாக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாக ஐ.நா. அகதிகள் நல அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், இந்த அடையாள அட்டை மூலம் எதிர்காலத்தில் அவர்கள் மியன்மார் திரும்புவதற்கான அடையாளச் சான்று அவர்களுக்குக் கிடைத்துள்ளதாகவும் அகதிகள் கடத்தலுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கும் இந்த அடையாள அட்டை உதவிக்கரமாக இருக்கும் என்றும் ஐ.நா. அமைப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 2017 ஆம் ஆண்டு மியன்மார் இராணுவத்தின் அடக்குமுறைக்கு பயந்து சுமார் 7.4 இலட்சம் ரோஹிஞ்யா அகதிகள் பங்களாதேஷில் தஞ்சமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# றிசாத் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



(ஹற்றன்)

அமைச்சர் றிசாத் பதியுதீன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு உரிய தண்டனை கொடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் முதலில் குரல் கொடுப்பவன் நானாகவே இருப்பேன்.

அதைவிடுத்து அரசியல் இலாபத்திற்காக அவர் மீது குற்றம் சாட்டுவதையும் அவருக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் மலையக மக்கள் முன்னணி ஆதரவு வழங்காது என மலையக மக்கள் முன்னணி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றன் வெலிஓயா மேற்பிரிவு தோட்டத்தில் சுதந்திரபுரம் வீடமைப்பு திட்டத்தில் 30 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர், மக்கள் மத்தியில் உரையாற்றும் போது, அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கையளித்துள்ளனர். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமானது அமைச்சர் மீதான தனிப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கையாகும்.

அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றவர்களின் சதித் திட்டமாகவே இதனை மலையக மக்கள் முன்னணி பார்க்கின்றது. சிறுபான்மை கட்சிகளும், சிறுபான்மை மக்களும் இந்த சந்தர்ப்பத்தில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

அமைச்சர் றிசாத் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக உரிய விசாரணை குழு அமைக்கப்பட்டு அவர் மீது குற்றம் இனங்காணப்படும் பட்சத்தில் அதற்கு அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்குமானால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை நான் வழங்க தயாராக இருக்கின்றேன்.

அதைவிட்டு வெறுமனே வதந்திகள் மூலமாகவும் ஒவ்வொரு அரசியல்வாதிகளுக்கு தனது ஆதாயத்தை தேடிக்கொள்ளும் நோக்கத்துடனும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது.

கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினர் மீதும் பொய்யான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. ஆனால் அவை எவையும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை. இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் ஆனது வெற்றி பெற்றால் இந்த நாட்டின் மீது சர்வதேச ரீதியான முஸ்லிம்களுக்கு வெறுப்பு ஏற்படும். முஸ்லிம்கள் பழி வாங்கப்படுவதாக அவர்கள் கருதுவார்கள்.

இதன் மூலம் உல்லாச பிரயாணிகளாக வர விரும்பும் முஸ்லிம்கள் அதனை தவிர்த்துக் கொள்வார்கள். இன்னும் பல முஸ்லிம் நாடுகளை நாம் நேரடியாகப் பகைத்துக் கொள்ள வேண்டி வரும். எனவே இது ஒரு ஆரோக்கியமான செயற்பாடாக நான் கருதவில்லை.

குற்றம் சுமத்தப்படுகின்ற முஸ்லிம் அமைச்சர்கள், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவர் மீதும் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மையிலேயே அவர்கள் குற்றம் செய்து இருப்பார்களேயானால் அதற்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்க நான் தயாராக இருக்கின்றேன்.

அதைவிடுத்து அரசியல் நோக்கத்திற்காக ஒரு சிலரின் அரசியல் சுய வளர்ச்சிக்காக கொண்டு வரப்படும் இவ்வாறான தீர்மானங்களுக்கு நாம் என்றும் ஆதரவு அளிக்க மாட்டோம் எனவும், 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட ஜனநாயக விரோத செயலுக்கு எதிராகவும் நாங்கள் இதே நிலைப்பாட்டையே கொண்டு இருந்தோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சஹ்ரானின் படத்தை கணனியில் வைத்திருந்த ஆசிரியர் விசாரணையின் பின்னர் விடுதலை

(கொழும்பு)

சஹ்ரானின் புகைப்படத்தை மடிக்கணனி திரையில் வைத்திருந்த தனியார் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீண்ட விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் தேடுதலின் போது மடிக்கணனி ஒன்று வீடு ஒன்றின் மேசை மீது இயங்கிய நிலையில் காணப்பட்டுள்ளது.

இதனை அவதானித்த பாதுகாப்பு தரப்பினர் குறித்த கணனியை சோதனை மேற்கொண்ட நிலையில் அதிலிருந்து அண்மையில் இலங்கையில் தொடர் தற்கொலை குண்டுத்தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட சஹ்ரானின் புகைப்படங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்ததை அவதானித்தனர். அத்துடன் அக்கணனியை பாவித்தவரின் வட்சப் சமூக வலைத்தளத்திலும் குறித்த புகைப்படங்கள் காணப்பட்டதையடுத்து அவ்வீட்டில் இருந்த 35 வயது மதிக்கத்தக்க தனியார் பாடசாலை ஆசிரியரான முஹமட் இஸ்மாயில்ஜஹானா என்பவர் கைது செய்யப்பட்ட நிலையில் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.



இதேவேளை இச்சுற்றிவளைப்பின் போது மற்றுமொரு நபரும் அடையாள அட்டை இன்றி காணப்பட்டமையால் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்ட தனியார் பாடசாலை ஆசிரியரை நீண்ட நேரம் விசாரித்த பொலிஸார் வாக்குமூலம் ஒன்றை பெற்று விட்டு விடுதலை செய்துள்ளனர். (இ-7)

# தலதா மாளிகைக்கு ராணுவப் பாதுகாப்பு

(கண்டி)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தீவிர பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு பூஜை வழிபாடுகளுக்காக தலதா மாளிகைக்கு பெருமளவிலான பக்தர்கள் செல்கின்றனர்.

இதன் காரணமாக தலதா மாளிகைக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் பக்தர்களிடமும் தனித்தனியாக சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இரவு ஏன் இருட்டாக இருக்கின்றது?

இருநூறு வருடத்திற்கு முன் ஒருவருக்கு ஒரு சந்தேகம் வந்தது. என்ன சந்தேகம்? என்று கேட்கின்றீர்களா? வேற ஒன்றுமில்லை. இரவு ஏன் இருட்டாக இருக்கின்றது? அது தான் இவருக்கு வந்த சந்தேகம்.

அவர் பெயர் ஜெ.பி.எல்.டிசேசாக்ஸ் சுவிட்சர்லாந்தில் வாழ்ந்தவர். இவர் தான் இந்த கேள்வியை முதலில் எழுப்பினார். அவர் இந்தக் கேள்வியை நம்மைப் பார்த்து கேட்டிருந்தால் உடனே இரவு சூரியன் இல்லை அதனால் தான் இருட்டாக இருக்கின்றது என்று பதில் கூறியிருக்கலாம். ஆனால் விஞ்ஞானிகள் அல்லது விபரம் தெரிந்தவர்கள் இந்தப் பதிலை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்! ஏன் தெரியுமா?

நீங்களே யோசித்து பாருங்கள்! விண்மீன்கள் எல்லாம் தானாக ஒளிரக் கூடியவை. சூரியனும் ஒரு விண்மீன் தான்! அதற்கும் அந்த ஒளி தரும் சக்தி இருக்கின்றது. அதனால் தான் அது நமக்கு தேவையான ஒளியையும் வெப்பத்தையும் பகலில் கொடுக்கின்றது. ஆனால் இரவில் அதிகமான நட்சத்திரம் வானத்தில் இருக்கின்றது. ஒவ்வொன்றும் ஒரு சூரியன் போன்றது. அப்படி இருக்கின்ற போது பகலில் இருக்கின்றதை விட அதிகமான வெளிச்சம் பூமியில் இருக்க வேண்டுமே! ஏன் இல்லை?

இப்படி ஒரு கேள்வியை அடுத்தபடியாக நம்மைப் பார்த்து கேட்டால் என்ன செய்வது? நீ கேட்ட கேள்விக்கு நான் தானா கிடைத்தேன். வேற விபரமான ஆளா பார்! என்று கூறி விட்டு நழுவவேண்டியது தான். நட்சத்திரம் பூமியிலேயிருந்து வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கின்றது. அது மட்டுமல்ல அதிலிருந்து வருகின்ற ஒளியாற்றல் மாறுபடுகின்றதாம். எப்படி மாறுபடுகின்றது?

பூமிக்கும் நட்சத்திரத்திற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வளவோ, அந்த தூரத்தின் வர்க்கத்தோடு தலை கீழ் விகிதத்திலே மாறுபடுகின்றது. அதனால் இடைப்பட்ட தூரம் அதிகரிக்க, அதிகரிக்க நட்சத்திரத்திற்கு இடையேயிருந்த பூமிக்கு வந்து சேருகின்ற ஒளியின் அளவு மிகவும் குறைந்து போய் விட்டது. இது ஒரு விளக்கம். அதுவும் உண்மை தான். இருந்தாலும் இதிலே இன்னொரு விடயத்தை யோசித்து பார்க்க வேண்டும்.

ஒரு உதாரணத்திற்கு... சூரியனிடம் இருந்து வந்து சேருகின்ற வெளிச்சத்திலே, பத்துலட்சத்தில் ஒரு பங்கு வெளிச்சம் தான் ஒரு நட்சத்திரத்திலே இருந்து இங்கே வந்து சேருகின்றதாக வைத்துக்கொள்வோம்.

அப்படியானாலும் பத்து லட்சம் நட்சத்திரங்களிடமிருந்து பூமிக்கு வந்து சேருகின்ற மொத்த வெளிச்சத்தையும் கூட்டினால் ஒரு சூரியனிடம் இருந்து வருகின்ற அளவிற்கு வெளிச்சம் இருக்க வேண்டும். ஒரு சின்ன செயல்முறையை செய்து பார்க்கலாம். இரவில் ஒரு இருட்டான பகுதியில் நில்லுங்கள். வெளிச்சமான பகுதியில் நில்லுங்கள். வெளிச்சமான பகுதியிலே உள்ள ஒரு சுவரை ஒரு சின்ன குழாய் மூலம் பாருங்கள்.

ஒரு காகிதத்தை குழாய் போன்று சுருட்டிக் கொள்ளுங்கள். முதலில் கொஞ்சம் அருகிலிருந்துபார்த்து விட்டு பின் ஒரு பத்து அடி தூரம் பின்னாடி நகர்ந்து போய் நின்று மறுபடியும் பாருங்கள். முதலில் பார்த்த போது சுவரிலே ஒரு சிறு பகுதி ஒளி வட்டமாக தெரியும். பின்னால் நின்று பார்த்த போது அதிகமான சுவர் பரப்பு தெரியும். ஆனால் வெளிச்சம் குறைவாக இருக்கும். உண்மையிலே அந்த ஒளிக்குறைவு சுவர்பரப்பு அதிகரிக்கின்றதை சரியாக்குகின்றது.

வானத்தில் நட்சத்திரம் பல்வேறு தூரங்களில் சிதறிக்கிடக்கின்றது. நட்சத்திரம், வாயுத்துகள் இது சேர்ந்த உடுமண்டலங்கள் ஒரே சீராக பரவி காணப்படுகின்றது. ஒளி மண்டலங்கள் ஒரே நிலையிலேயே இருப்பதில்லை. உடு மண்டலங்களின் பின் தங்குதல் என்று இதற்கு பெயர்.

எட்வின் ஹப்பில் (Edwin Hubble) என்கின்ற வானியல் வல்லுநர் தான் இதை கண்டுபிடித்து உலகத்திற்கு எடுத்துக் கூறினார். உடுமண்டலங்களில் இருந்து வெளிவருகின்ற ஒளியின் அலை நீளம் அதிகரித்து சிவப்பு நிறத்தை அடைந்து விடுகின்றது. மேலும் அதிலிருந்து நம்மிடம் சேர்கின்ற ஒளி ஆற்றல் மிகவும் குறைந்து போய்விடுகின்றது. ஒரு விண்மீனிலிருந்து வெளிவரும் ஒளிக்கோள் வளைவிலே அதற்கு முன்னாலே உள்ள விண்மீன்களாலே தடுக்கப்பட்டு ஓரளவிற்கு உறிஞ்சப்படுகிறது. உண்மையிலே இந்த உடுமண்டலங்களின் பின் தங்குதல் விளைவுகளாலே மிகவும் தூரத்தில் உள்ள நட்சத்திர ஒளி பூமிக்கு கொஞ்சம் கூட வந்து சேருவதில்லை.


ஆகாய கங்கை என்று சொல்கின்றோமே அந்த உடுமண்டலத்தின் மையப்பகுதி மிகவும் வெளிச்சமாக உள்ளது. ஆனால் அதை சுத்திகரிக்கின்ற தூசு படலம் அதை மறைத்து விடுகின்றது. அதனால் அந்த வெளிச்சம். குறைந்து விடு கின்றது.

இரவு இருட்டாக இருப்பதற்கு இதெல்லாம் காரணம். இந்த காரணம் எல்லாம் தெரியாத ஒருவர் இருட்டில் எதையோ தேடிக்கொண்டிருந்தார். அவரிடம் போய்...என்ன தேடுகின்றீர்கள்? ரொம்ப நேரமாக? என்று கேட்டார். வெளிச்சத்தை தேடிக்கொண்டிருக்கின்றேன்! என்றார்.

# தனியாரின் காணிப் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும்

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் –எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

06




தனியாரிடம் உள்ள காணி பத்திரங்களை (உறுதிகளை) பின்வருமாறு வகைப்படுத்தலாம் .

- காணி பரிமாற்ற உறுதி (Deed of transfer)
- காணி நன்கொடை உறுதி (Deed of Gift)
- பிரகடன (காணி) உறுதி (Deed of Declaration)
- உயில் - வாக்கு மூலப்பத்திரம் (Last will and Testament)
- காணி உரித்துச் சான்றிதழ் (Title certificate)

### ○ வெவ்வேறு வகையான உறுதிகள்


- காணி பரிமாற்ற உறுதி (Deed of transfer)

ஒரு நபருக்குச் சொந்தமான ஒரு சொத்து விற்கப்படும் அல்லது மற்றொருவருக்கு மாற்றப்படும் போது பரிமாற்றச் செயன் முறைக்காக தயாரிக்கப்படும் ஒரு பத்திரம்.


TRANSFER
No. 6030
Know all Men by these Presents that

### ○ காணி நன்கொடை உறுதி (Deed of Gift)

எந்தவொரு பண பரிவர்த்தனையுமின்றி ஒரு காணியை/சொத்தை ஒரு நபர் (donor) மற்றொரு நபருக்கு (donee) நன்கொடையாக வழங்கல்.


DEED OF GIFT
Know all men by these presents that

### ○ பிரகடன (காணி) உறுதி (Deed of Declaration)

எந்தவொரு நபரும் ஒரு காணி /சொத்து சம்பந்தமாக ஒரு கோரிக்கையை அல்லது விரும்பும் எந்த உரிமையையும் அறிவிக்க விரும்பினால், அத்தகைய உரிமை அல்லது கூற்றுக்கான சட்டபூர்வமான அடிப்படைகளை உருவாக்க அறிவிப்புச் செயலை பிரகடன (காணி) உறுதி மூலம் நிறைவேற்றலாம். காணி உறுதியைத் தொலைத்தவர்கள் அதனை மீளப்பெறமுடியாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான உறுதியை நொத்தாரிசு மூலம் தயாரிக்க முடியும்.

### ○ உயில் - வாக்கு மூலப்பத்திரம் (Last will and Testament)

ஒரு நபர் (Testator) தான் வாழ்க்கை வாழ்ந்த காலத்தில் சம்பாதித்த சொத்து, அவரது இறப்புக்குப் பிறகு எவ்வாறு பகிரப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு வெளியிடப்படும் கடைசிப் பிரகடனம்.

### காணி உரித்துச் சான்றிதழ்

காணிகளின் உரித்து தெளிவாகவும் உறுதியாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.


உரித்துச் சான்றிதழ்
அளவுத் திட்டம் 1:2,000
05/06/2010
நில சக்தி
BIM SAVIYA

### ○ காணி அளவையுடன் சம்பந்தப்படாத காணி வழக்குகள்

1. ஒரு தனி நபர் அல்லது நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களின் உரிமையை வேறொருவர் உரிமை கொண்டாடும் பொழுது

2. சட்ட முறைமைகளுக்கு எதிராக உரிமை மாற்றம் செய்துள்ள போது.

3. உரிமையாளரின் அனுமதியின்றி சட்ட விரோதமாக உடைமையில் தங்கியிருந்து வெளியேற மறுக்கின்ற போது.

4. சட்டரீதியாக உடைமையில் உட்சென்று பின்னர் சட்ட விரோதமாக வெளியேற மறுக்கின்ற போது.

5. சேவக உரிமை (servitude) மீறப்படுகின்ற போது

6. எல்லைப் பிரச்சினைகள் ஏற்படும் போது பிணக்குகள் ஏற்படுகின்றன.

இப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இவ் வழக்குகள் பொதுவாக ஆட்சியுரிமைச் சட்டம் 1872ஆம் ஆண்டின் இல. 22 பிரகாரம் நடைபெற்று தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இச் சட்டம் சம்பந்தமான விவரங்கள் "Centre for Promotion and Protection of Human Rights" என்னும் இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டவையாகும். இவ்விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

### ○ ஆட்சியுரிமைச் சட்டம் 1872ஆம் ஆண்டின் இல.22 (Prescription Ordinance)

சட்டங்களில் மிக முக்கியமானதும் ஒவ்வொருவராலும் அறிந்துகொள்ள வேண்டியதுமான சட்டம் ஆட்சியுரிமை சட்டமாகும். இச்சட்டமானது ஒருவன் தூங்கிக் கொண்டு இருப்பதால் அவனது உரிமை பறிபோவதையும் விழித்துக் கொண்டு இருப்பதால் அவனுக்கு கிடைக்கும் உரிமையையும் எடுத்துக் கூறுவதாகும். ஆட்சியுரிமைச் சட்டமானது 1872 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் அமுலில் உள்ளது. இது பல முறை திருத்தப்பட்டும் உள்ளது.

### ○ ஆட்சியுரிமை சட்டத்தின் (பிரிவு 13இன்) கீழ் காலவரம்புகள்

அசையாச் சொத்து ஒன்றை ஒருவர் இன்னுமொருவரின் இடையீடின்றியும் தடையின்றியும் எதிர் உரித்துக் கொண்டு தனது உடைமையில் 10 வருடம் வைத்திருந்தால் அந்த அசையாச் சொத்து உரித்தாளராக அவர் கொள்ளப்படுவார் என ஆட்சியுரிமை சட்டம் கூறுகிறது. இதற்கு சில தேவைப்பாடுகளும் உள்ளன. ஆயினும் பொதுவாக 10 வருடகாலம் தங்குதடையின்றி எதிர் உரித்துக் கொண்டு அவ்வாதனத்தை அவர் வைத்திருக்க வேண்டும். மற்றவர்களின் கண்ணுக்கு இவர்தான் உரிமையாளர் என்ற அபிப்பிராயத்தை உண்டாக்கவேண்டும். இதற்கு சில மட்டுப்பாடுகள் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது. மற்றைய பரந்த கொள்கையையும் இது கொண்டது.

சிலர் நொத்தாரிஸ் ஒருவரிடம் சென்று தான் தொடர்ந்தும் அந்தக் காணியில் 10 வருடங்களிற்கு மேல் குடியிருப்பதாகவும் அக்காணி தனக்கே சொந்தம் என்று கூறி ஒரு பிரகடன உறுதியை எழுதிக் கொள்வதுண்டு. ஆனால் இப்பிரகடன உறுதியை ஏற்பதும் நிராகரிப்பதும் நீதிமன்றத்தின் கையில் தங்கியுள்ளது. பிரகடன உறுதியை உள்ளூராட்சிச் சபைகள் அங்கீகரித்து தமது சோலை வரி உரிமையாளர் வரிசையில் பிரகடன உறுதியாளரை சேர்ப்பது இல்லை.

> அசையா சொத்து ஒன்றை ஒருவர் இன்னுமொருவரின் இடையீடின்றியும் தடையின்றியும் எதிர் உரித்துக் கொண்டு தனது உடைமையில் 10 வருடம் வைத்திருந்தால் அந்த அசையாச் சொத்து உரித்தாளராக அவர் கொள்ளப்படுவார் என ஆட்சியுரிமை சட்டம் கூறுகிறது.

அத்துடன் இப் பிரகடன உறுதி நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றின் கீழ் பெறக்கூடிய பிரகடன உறுதிக்கு நிகரானது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழ் ஒருவர் 10 வருடங்களின் பின்னர் உரித்தானவராகலாம் என்பது உண்மையாயினும் அதற்கு சில புறநடைகள் அல்லது விலக்களிப்புக்கள் உண்டு.

உதாரணமாக உரிமையாளர் இலங்கையின் கடல்எல்லைக்கு வெளியே வாழ்கின்ற சந்தர்ப்பத்தில் இச் சட்டம் விலக்களிப்புக்கள் வர இடமுண்டு. இலங்கையின் சட்டப்படி ஒருவருடைய சொத்து (காணி) காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவருடைய உரிமையை உறுதி செய்து கொள்வதற்கான முதல் தர ஆவணமாகும். அதன் மூலப் பிரதி இல்லாத பட்சத்தில் அந்த உறுதியை நிறைவேற்றிய சந்தர்ப்பத்தில் நொத்தாரிசிடம் அல்லது காணிப்பதிவகத்தில் காணப்படுகின்ற உறுதிகள் மூலம் உறுதி செய்யலாம். இவை இல்லாத பட்சத்தில் காணிப்பதிவகத்தில் காணப்படுகின்ற பதிவு தொடர்பான பத்திரம் (abstract) மூலம் உறுதி செய்து கொள்ளலாம். இவ்வாறு காணப்படும் சந்தர்ப்பத்தில் உரிமையாளரின் அனுமதியின்றி சட்ட முறைகளுக்கு எதிராக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருப்பின்; மேற்கூறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் உரிமையை உறுதி செய்து கொள்ளலாம். இதற்கு மேலதிக ஆவணங்களாக உள்ளூராட்சி சபைகளின் ஆவணங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் முன்னால் கூறப்பட்ட ஆவணங்கள் முழுமுதல் ஆவணங்களாகும். வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் காணப்பட்ட சூழ்நிலை காரணமாக மேற்கூறப்பட்ட சகல ஆவணங்களையும் பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் பெற்றுக்கொள்ளக் கூடிய ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தின் முன் உறுதி செய்து கொள்வதன் மூலம் சொத்துக்களின் உரிமையை பெற்றுக் கொள்ளலாம்.

### ○ ஆட்சியுரிமை சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் உள்ள ஏற்பாடுகள்

ஒருவரை அவர் வசிக்கும் இடத்தில் இருந்து அப்புறப்படுத்திய தினத்தில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் அவர் தன்னை மீண்டும் தான் இருந்த இடத்தில் அமர்த்துமாறு கோரி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாம்.

நீதிமன்றம் அவரது கோரிக்கையை விசாரணை செய்து அவருக்கு சார்பான தீர்ப்பை வழங்கலாம். ஆனால் அவர் அவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டது சட்டப்படியான ஒரு செயலால் என்றால் உதாரணமாக நீதிமன்ற தீர்ப்பு ஒன்றினால் என்றால் அவர் தனக்கு சார்பான தீர்ப்பை பெற முடியாது.

இன்னுமொரு தேவைப்பாடு என்னவெனில் அவரை அப்புறப்படுத்திய தினத்திற்கு முன்னர் உள்ள ஒரு வருடத்திற்கு மேல் அவர் அல்லது அவரது முன்னோர் அந்தக் காணியில் வசித்திருந்தது நிரூபிக்கப்பட வேண்டும்.

### ○ உடைமை (Possession) வழக்கு (இது உரித்து நிறுவல் அல்ல. உடைமை நிறுவல் வழக்கு)

நாளாந்த வாழ்க்கையில் பலர் சந்திக்கும் வழக்குகளில் உடைமை நிறுவல் வழக்கும் முக்கியமான வழக்காக விளங்குகின்றது. இதற்கு காரணம் உறுதி ஒன்று தேவையில்லை. அதாவது உடைமையில் இருப்பவர் தனக்கு இக்காணியில் உரித்து (உறுதிப்பத்திரம்) இல்லை என்று நன்கு அறிந்த போதும் இக்காணியின் உறுதிப்பத்திரம் உள்ள ஒருவருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்து வெற்றி பெறலாம். அவ்வாறு வெற்றி பெற சில நிபந்தனைகள் உண்டு. அவை நிறைவு பெற்றிருந்தால் உறுதிப்பத்திரம் பெற்றவர் ஒன்றுமே செய்ய முடியாது. இதற்கும் சில நிபந்தனைகள் உண்டு. ஆகவே இவற்றை அறிவதன் மூலம் காணி சம்பந்தமான பல விடயங்களை கற்றுக் கொள்ளலாம். உடைமை நிறுவல் வழக்கைப் பற்றிப் பார்ப்போம்.

> ஒரு காணியில் உடைமையில் இருப்பவர் தனக்கு அக் காணியில் உரித்து இல்லை (உறுதிப்பத்திரம் இல்லை) என்று நன்கு அறிந்த போதும் அக் காணியின் உறுதிப்பத்திரம் உள்ள ஒருவருக்கு எதிராக வழக்கைத் தாக்கல்செய்து உடைமையைப் பெறமுடியும்.

(தொடரும்...)

## சொந்த நாட்டில் துன்புறுத்தல்கள்

# இலங்கை அகதிகள் நாடுகடத்தல்

# பிரிட்டனுக்கு ஐ.நா.கண்டனம்!

**(ஜெனிவா)**

**பிரித்தானியாவிலிருந்து இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அகதிகள் நாடு கடத்தப்பட்டுள்ளமைக்கு ஐ.நா. கண்டனம் வெளியிட்டுள்ளது. துன்புறுத்தல்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.**

பிரித்தானியாவிலிருந்து அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அகதிகள் நாடுகடத்தப்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுகடத்தப்படுகின்ற அதிகள் அவர்களது சொந்த நாடுகளில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில், கடந்த ஆண்டு மாத்திரம் பிரித்தானியா 43 இலங்கை அகதிகளை பலவந்தமாக நாடு கடத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஓடிவந்து பேசிய சிறுவர்களின் உடல்கள் சிதறுண்ட நிலையில்

## கண்ணீர் மல்கிய அருட்தந்தை



(கொழும்பு)

"புத்தாடைகள் அணிந்து மலர்ந்த முகத்துடன் ஓடிவந்து பேசிய சிறுவர்களின் உடல்கள் சிதறுண்ட நிலையில் கிடப்பதை கண்ட போது... என் இதயமே நொறுங்கியது" என கொழும்பு கொச்சிக்கடை தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நேரில் கண்ட அருட்தந்தை ரோய் மரியரட்ணம் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

கொழும்பு சொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற போது அருட்தந்தை ஜெய் மரியரட்ணம் திருப்பலி பூசையை ஒப்புக் கொடுத்திருந்தார்.

இந் நிலையில் குறித்த தாக்குதல் சம்பவத்தின் போது தனது மனநிலை எப்படியிருந்தது என்பது தொடர்பில் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி - இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற வேளையில் உங்களுடைய தலைமையிலேயே திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இத்தருணத்தில் அதிசயிக்கத்தக்க விதமாக கடவுளின் கிருபையால் காப்பாற்றப்பட்டுள்ளீர்கள். ஆயினும், இத்தகைய ஆபத்தை கடந்து வந்துள்ள தங்களது மனநிலை எவ்வாறாக உள்ளது?

பதில் - (கண்களில் கண்ணீர் மல்கியவராய்) திருப்பலி ஆரம்பமாவதற்கு முன் ஆலயத்தின் நுழைவாயிலுக்கு 15 நிமிடங்களுக்கு முன்பே சென்று அங்கு கூடியிருந்த மக்களுடன் குறிப்பாக பல சிறுவர்களுடன் மகிழ்ச்சியாக உரையாடினேன்.

அழகான புத்தாடைகள் அணிந்து கள்ளங்கபடமற்ற மலர்ந்த முகத்துடன் ஓடி வந்து என்னுடன் பேசியதையும் பின்பு அவர்களின் சிதறுண்ட உடல்களுடன் கிடப்பதையும் கண்ட என் மனநிலையை விபரிக்க வார்த்தைகளே இல்லை. அச்சம்பவம் நினைவில் வரும் போதெல்லாம் என் கண்கள் குளமாகின்றன.

அந்தத் தருணத்தில் எவரும் எதிர்பாராத வண்ணம் ஏற்பட்ட இத்தகைய பாரிய குண்டு வெடிப்பால் ஏற்பட்ட இழப்புக்களோ ஏராளம். இறை சந்நிதானத்தில் கூடியிருந்த பக்தர்களின் உடல்கள் சிதறுண்ட காட்சிகளை கண்ணுற்ற போது செய்வதறியாது ஸ்தம்பித்து நின்றேன்.


சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என இரத்த வெள்ளத்தில் மிதந்த தருணங்கள் என் மனக் கண்முன் வந்து செல்கின்றன. மரணஓலத்திலும் கூட அந்தோனியாரே! என அவலக்குரல் எழுப்பிய பக்தர்களின் சத்தம் என் செவிகளில் ஒலித்த வண்ணமே உள்ளது. இதனை என்றுமே என் வாழ்நாளில் மறக்க முடியாது.

இத்தகைய செயலைப் புரிந்தவர்கள் மேல் கடும் சினம் ஏற்பட்டது. ஏனெனில் மன அமைதியை தேடி மக்கள் கூடும் இறை சந்நிதானத்தில் இத்தகைய இழி செயலை புரிந்தமை கண்டிக்கத்தக்க விடயமாகும்.

இருப்பினும் கத்தோலிக்க குருவாக அருட்பணியாற்றும் நிலையில் குருத்துவத்தின் மேன்மையின் மகத்துவத்தையும், திருவிவிலியத்தின் படிப்பினைகளுக்கும் கட்டுப்பட்ட ஒருவராக சகிப்புத் தன்மையுடன் செயற்பட வேண்டியவராக்கப்பட்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார் அருட்தந்தை ரோய் மரியரட்ணம். (இ-7)

## விகாராதிபதி எதிர்ப்பு

# வெசாக்கூடு காட்சிப்படுத்த பொலிஸார் தடை விதிப்பு





(சாலியவெவ)


சாலியவெவ இளைஞர்கள் குழுவொன்றால் தயாரிக்கப்பட்ட சுமார் 500 வெசாக் கூடுகளை சாலியவெவ நகரில் காட்சிப்படுத்த பொலிஸார் தடை விதித்ததன் காரணமாக நேற்று முன்தினம் நண்பகல் அவற்றை எரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சாலியவெவ நகரிலுள்ள பௌத்த இளைஞர்களும் கிறிஸ்தவ இளைஞர்கள் சிலரும் இணைந்து இந்த வெசாக் கூடுகளை செய்துள்ளனர். இவ்வாறு தயார் செய்த வெசாக் கூடுகள் ஒவ்வொன்றினதும், ஒரு பக்கத்தில் பௌத்த தர்மச் சக்கரமும் மறுபக்கத்தில் கிறிஸ்தவ சிலுவை அடையாளமும் பொதித்திருந்துள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு கருவலகஸ்வெவ சாசன மத்திய சபையின் பிரதிப் பதிவாளர் அலுத்கம ஸ்ரீ லும்பினி விகாரையின் விகாராதிபதி மானேவே பஞ்ஞாராம தேரர் எதிர்ப்புத் தெரிவித்தமையையடுத்தே இந்த வெசாக் கூடுகளை அகற்ற பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (இ-7)

# வர்த்தக நிலையத்தில் தீ



(காலி)

காலி - ஹபராதுவ - கினிகல வீதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று அதிகாலை தீ பரவியுள்ளது.

இந்நிலையில் பொலிஸார் மற்றும் காலி தீயணைப்புப் பிரிவு அதிகாரிகள் பிரதேச மக்களின் உதவியுடன் தீயணைப்பை மேற்கொண்டனர். தீ பரவலுக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

இச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# குண்டுவெடிப்பால் பிற்போடப்பட்ட பரீட்சை திகதிகள் மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த மாதம் ஏப்ரல் 22 தொடக்கம் நடைபெறவிருந்து நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் பிற்போடப்பட்ட இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கிலப் பரீட்சை, இலங்கை கீழைத்தேய கல்விச் சங்கத்தின் பரீட்சைகள், ஆய்வுகூட உதவியாளர் தரம் -111 இற்கான திறந்த போட்டிப் பரீட்சை போன்றவற்றை இம்மாதத்தில் நடத்துவதற்கான திகதிகள் பரீட்சைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கை கீழைத்தேய கல்விச் சங்கத்தின் பரீட்சைகள் நாளை 21 ஆம் திகதி தொடக்கம் 31 வரையும் ஜூன் 01 தொடக்கம் 09 வரையும் ஆய்வுகூட உதவியாளர் தரம் - 111 இற்கான திறந்த போட்டிப் பரீட்சை இம்மாதம் 26 ஆம் திகதியும் இலங்கை அதிபர் சேவைக்கான ஆங்கிலப் பரீட்சை இம்மாதம் 31 ஆம் திகதியும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கோர விபத்தில் குடும்பஸ்தர் பலி

## 8 பேர் படுகாயம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் குறுந்துகஹஹேதெக்ம நுழைவாயிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை ஹயஸ் மற்றும் பாரவூர்தி மோதுண்டதில் இந்தக் கோர விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் ஹயஸ் சாரதி உயிழந்துள்ளார்.

குறித்த நபர் களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் எல்பிடிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# இலங்கையில் தமிழர்

**ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)**

கலாநிதி மு.குணசிங்கம்

251



## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

தேசாதிபதி மனிங் 01.03. 1922 இல் குடியேற்ற நாடுகளின் செயலாளருக்கு அனுப்பிய அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

சட்ட நிருபண சபையின் கூறுகள் ஒழுங்கமைக்கப்பட்ட விதமானது அரசாங்கம், சபைக் கட்டளைச் சட்டத்தின் 52 ஆவது சரத்தின் கீழ் அல்லாது எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது என்ற நிலைப்பாட்டிலுள்ள அதேவேளையில் எதிர்க்கட்சியிலுள்ள உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரின் ஒருமித்த எதிர்ப்பு எழும் பட்சத்தில் எந்தவொரு தனிப்பட்ட இனமுமே தனது விருப்பை ஏனைய இனங்களின் மேல் திணிக்க முடியாது.

52 ஆவது சரத்தின்படி எந்தவொரு மசோதாவையாவது நிறைவேற்றுதல் அதி முக்கியமானது எனத் தேசாதிபதி கருதும் பட்சத்தில் அந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரின் வாக்குகளைக் கருத்துக்கெடுக்காது உத்தியோகபூர்வ அங்கத்தவரினதும் நியமன அங்கத்தவரினதும் வாக்குகளை மட்டுமே கருத்திற்கு எடுக்க வேண்டும்.

அரசாங்கத்தின் இந்த நிலையைத் தாம் ஏற்றுக்கொள்வதாக குடியேற்ற நாடுகளின் செயலாளர் 11 ஜனவரி 1923 இல் அனுப்பிய கடிதத்தில் பதிலளித்துள்ளார்.

குடியேற்ற நாட்டின் (இலங்கையின்) தற்போதைய நிலைமைகளையும் மக்கள் இனங்களாகப் பிரிந்து காணப்படும் நிலையிலும் தொகுதிகள் எவ்வாறு அமைந்திருந்த போதும் வரையறையற்ற ஒரு காலத்திற்குப் பிரதிநிதித்துவம் இனவாரியாகவே நிச்சயமாக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர் யாவருமே பிரதேசவாரித் தொகுதிகளிலிருந்து பிரதிநிதித்துவம் வகிக்கும் பட்சத்தில் அது அடிப்படையில் இனவாரிப் பிரதிநிதித்துவமாகவே இருக்கும்.

இந்த இரு கூற்றுகளும் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் 50:50 கோரிக்கையின் மூலாதாரங்களாக அமையவிருந்தன. குடியேற்ற நாடுகளின் செயலாளரிடமிருந்து 1920 இலிருந்து 1923 வரையிலான அரசியல் சீர்திருத்தங்கள் பற்றிய இறுதியான முடிவு 22 ஜனவரி 1924 இல் கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

இலங்கையிலுள்ள பல இனங்கள் இப்போது இருக்கின்றமை போல் தோன்றும்.

தமக்கிடையே உள்ள பல முக்கியமான வேறுபடும் நலன்களுக்கான அக்கறைகளையிட்டு அந்த இனங்கள் தமது உறுதிப்பாட்டில் இருக்கும் காலம்வரை சட்ட நிருபண சபையில் இனவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தொடர ஏதாவது ஏற்பாடு செய்தேயாகவேண்டுமென நான் அஞ்சுகின்றேன்.

மேற்படி குடியேற்ற நாடுகளுக்கான செயலாளரின் கூற்றும் தேசாதிபதி மனிங் 1923-24 அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் இனவாரிப் பிரதிநிதித்துவத்திற்கும் இடமளித்ததும் ஜி.ஜி. பொன்னம்பலம் தனது 50:50 கோரிக்கைக்கு ஆதாரமாகவும் நம்பிக்கைக்கு உரியதாகவும் கருதியிருக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் பொன்னம்பலம் முதலில் சிறுபான்மையினரின் அரசியல் தலைவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

நியமன அங்கத்தவரான மலேய முஸ்லிம் அங்கத்தவர் ரி.பி. ஜயா, ஹற்றனுக்கான இந்தியத் தமிழ் அங்கத்தவர் கே. நடேசஐயர் இருவரும் பொன்னம்பலம் அவர்களுக்குப் பலமான ஆதரவாளராக இருந்தனர்.

பறங்கிய, ஐரோப்பிய அங்கத்தவரும் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை ஆதரித்தனர். ஆனால் பொன்னம்பலம் சிறுபான்மையினருக்குரிய 50 வீதமான பிரதிநிதித்துவத்தை விகிதாசார (Prorata basis) அடிப்படையில் முஸ்லிம்களுக்கு வழங்கப் பின்வாங்கியதன் விளைவாக முஸ்லிம் லீக் தனது ஆதரவை இறுதியில் விலக்கிக் கொண்டது.

பெரும்பான்மையான சிங்கள அரசியல் தலைவர்கள் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தையே தமது முழு அரசியல் இலாபம் கருதி வேண்டி நின்ற காரணத்தினால் இன அடிப்படையில் சிறுபான்மையினருக்கு சமபிரதிநிதித்துவத்தை வழங்கக்கூடிய பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முழுமையாக நிராகரித்தனர்.

இருந்தபோதிலும் அக்கால சிங்கள அரசியல் தலைமைத்துவத்தில் முக்கிய அங்கம் வகித்த எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவும் அவரது சகாக்களும் பொன்னம்பலத்துடன் சமரசம் பேச முன்வந்தனர்.

அதாவது பிரதேசவாரி விகிதாசாரத்தின் அடிப்படையில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கைக்குப் பதிலாக அறுபதுக்கு நாற்பது என்ற விகிதாசாரத்தில் சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கும் அது சம்பந்தமாகப் பேசுவதற்குரிய இடத்தினைக் கருத்திற் கொள்வதற்கும் பொன்னம்பலத்துடன் இணங்க முன்வந்தனர்.

ஆனால் பொன்னம்பலம் தனது கோரிக்கையில் மிகவும் விடாப்பிடியாக நின்று கொண்டார்.

இச்சந்தர்ப்பத்தில் அன்றைய தேசாதிபதியாக இருந்த சேர். அன்ட்றூ கல்டிகொட் (Sir Andrew Caldecott) பொன்னம்பலத்தின் மேற்குறிப்பிட்ட விகிதாசாரக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்காது அதற்கு எதிராகவே காணப்பட்டார்.

அத்தோடு 1938 இல் வைற்ஹோல் (White hall) நிர்வாகத்தினருக்குக் கல்டிகொட் அனுப்பிய கடிதத்தில் அரசாங்க சபைக்கு மேலதிகமாக 10 பிரதிநிதிகளை வழங்குவது இலங்கைத் தமிழருக்கும் கண்டிச் சிங்களவருக்கும் ஏனைய பின்தங்கிய பிரதேசங்களில் உள்ளவர்களுக்கும் நன்மையளிக்கக்கூடியதாக இருக்கும் என்ற தனது கருத்தைத் தெரிவித்தார்.

ஆனால் பொன்னம்பலம் தனது ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையைத் தவிர வேறெதையுமே ஏற்கும் நிலையில் இருந்ததாகத் தெரியவில்லை.

வைற்ஹோல் பழைமைவாதிகளான சிங்கள அரசியல் வகுப்பினருக்கு அதிக அதிகாரத்தை வழங்கும் நோக்கத்துடன் இயங்கும் என்பதனைப் பொன்னம்பலம் ஊகிக்கத் தவறிவிட்டார்.


(தொடரும்)

# மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை இல்லாமலாக்கப்பட்டுள்ளது

## பேராயர் கர்தினால் கவலை

(கொழும்பு)

**நாட்டில் கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை மீண்டும் இல்லாமலாக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**



கொழும்பு கங்காராமை விகாரையில் வருடாந்தம் வெசாக் வலயம் அமைப்பதற்காக சேகரிக்கப்படும் நன்கொடை பணம், உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதல்களால் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் பங்குபற்றலுடன் கங்காராமை விகாரையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஈழத்தமிழ் குடும்பத்திற்காக ஆஸியில் கையெழுத்து வேட்டை




அவுஸ்திரேலியாவில் நாடு கடத்தப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ள ஈழத்தமிழ் குடும்பத்திற்காக சுமார் 2 இலட்சம் வரையான கையெழுத்துக்கள் திரட்டப்பட்டு, அந்த நாட்டு குடிவரவு அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிலோலா சமூகத்தினர் இந்த கையெழுத்து திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்ததோடு, குறித்த கையெழுத்துக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மெல்பேனில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களான நடேசலிங்கம் - பிரியா குடும்பம் தம்மை அவுஸ்திரேலியாவில் வாழ அனுமதிக்குமாறு கோரி தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவர்களை நாடுகடத்தக்கூடாது என்று வலியுறுத்தி கையெழுத்துக்கள் திரட்டப்பட்டு குடிவரவு அமைச்சர் டேவிட் கொல்மனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஒரு தொகை தோட்டாக்கள், இராணுவச் சீருடை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மட்டாடுகம, கிரலவ பாலத்திற்கு அருகில் இருந்து ஒரு தொகை தோட்டாக்கள் மற்றும் இராணுவ சீருடை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விஷேட பொலிஸ் அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த தோட்டாக்கள் மற்றும் இராணுவ சீருடையும் கண்டுடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது 12 தோட்டாக்களும் இலங்கை இராணுவத்தின் சீருடையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் குறித்த தோட்டாக்கள் மற்றும் இராணுவ சீருடை கெகிராவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1724


### நிவேதனா

**இன்பத்திலும் துன்பத்திலும் நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய ஒரு உண்மை இந்த நிமிடம்கூட நிரந்தமில்லை**



### அபிநயன்

**சில கனவுகளை நிஜமாக எண்ணி மகிழ்வதும் பல நிஜங்களை கனவாக எண்ணி மறப்பதும் தான் வாழ்க்கை**



### சாரா

**அண்ணனோடு பிறக்காத எல்லாப் பெண்களுக்கும் உண்டு எந்த ஆணாவது தங்கச்சி என்று அழைக்கமாட்டார்களா என்ற ஏக்கம்**



### பகீரதன்

**பத்தில் ஏழு பேர் மொபைல் பயன்படுத்துகிறார்கள் - செய்தி மீதி மூணு பேர் சார்ஜ் போட்டிட்டு வந்திருப்பாங்களோ**



### சின்மயி

**எவனும் பின் நம்பர் என்னன்னு பார்க்கமாட்டான்**



### புருசோத்மன்

**எதுக்குடா அரிசி மூட்டையைக் கையால் குத்திட்டு வாற? இப்ப அது கைக்குத்தல் அரிசி... உடம்புக்கு ரொம்ப நல்லதுண்ணே!**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இஸ்லாம் மதத்தைப் போதிக்கும் நிறுவனங்களை ஒழுங்குறுத்தும் ஆவணம் பிரதமரிடம் கையளிப்பு

இஸ்லாம் மதத்தைப் போதிக்கும் கல்வி நிறுவனங்களை ஒழுங்குறுத்துவது தொடர்பாக முஸ்லிம் கல்வியியலாளர்களும் சட்டத்தரணிகளும் இணைந்து தயாரித்த எண்ணக்கரு ஆவணம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.


அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் எண்ணக்கருப் பத்திரம் அரசியல் யாப்புடன் உடன்படுகின்றதா என்பது பற்றி ஆராய்ந்து பிரதமருக்கு ஆலோசனைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுமாயின் திருத்தப்பட்ட எண்ணக்கருப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பிப்பது பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.



மத்ரஸா உட்பட இஸ்லாமிய கல்வி நிறுவனங்களை நிர்வகிப்பது தொடர்பான சட்ட மூலம் பற்றிய கலந்துரையாடலும் பிரதமர் தலைமையில் இன்று அலரி மாளிகையில் இடம்பெற்றது. இலங்கைக்கு ஷரிஆ பல்கலைக்கழகங்கள் அவசியம் இல்லையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார். பட்டப்படிப்பை வழங்கும் நிறுவனங்கள் அனைவருக்காகவும் திறந்த அடிப்படையில் செயற்பட வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# நகரசபை தவிசாளரின் அறிவிப்பையடுத்து மினுவாங்கொடையில் மீண்டும் பதற்றம்



(மினுவாங்கொடை)

இனவாதத் தாக்குதலுக்கு இலக்கான மினுவாங்கொடை நகரில் காணப்படும் வர்த்தக நிலையங்களில் நகரசபையால் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் ஒன்றையடுத்து அப்பிரதேசத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையங்களில் "இது நகரசபைக்குச் சொந்தமான பூமி, உள்ளே நுழைவது தடை" என நகரசபை தவிசாளரின் உத்தரவின் பேரில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து பனர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வர்த்தகர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து அங்கு விரைந்த, மினுவாங் கொடை பொலிஸ் பொறுப்பதி காரி, மினுவாங்கொடை நகர சபை தவிசாளர் நீல் ஜெயசேகரவை தொடர்பு கொண்டு குறித்த பனர்களை அகற்றுமாறு தெரி வித்துள்ளார்.

அதேவேளை நகர சபை இந்த நடவடிக்கையால் தமக்கு வர்த்தகம் செய்ய முடியாமல் போகும் ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். (இ-7)

# பாதுகாப்பைப் பலப்படுத்தவும்

## அமைச்சர் ஹாசிம் அவசர வேண்டுகோள்


(கொழும்பு)

மாவனல்லைப் பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு அமைச்சர் கபீர் ஹாசிம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் கபீர் ஹாசிம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மாவனல்லையில் இடம்பெறவுள்ள பௌத்த குழு ஒன்றின் கூட்டத்தை முன்னிட்டு அசம்பாவிதங்கள் ஏற்படாதவகையில் இவ்வாறு பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவனல்லை பெலிகம்மன பிரதேசத்தில் பௌத்தர்களை ஒன்றுகூடுமாறு அப்பகுதியிலுள்ள பிக்கு ஒருவர் சமூக வலைத்தளங்களில் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



# முஸ்லிம் அமைச்சரை இலக்குவைத்து ஏன் பிரேரணை கொண்டுவரப்படுகிறது

## பிமல் எம்.பி.சந்தேகம்



(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து இதுவரை தம்முடன் கலந்துரையாடப்படவில்லை என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொறுப்பேற்க வேண்டிய முதல் ஆள் ஜனாதிபதியே என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்ததாக இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதமரும், அமைச்சரவையும் பொறுப்புக் கூற வேண்டும். இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் பொறுப்புக்கள் அதிகமாகவே இருந்துள்ளன.

எனினும் இதனை விடுத்து ஏன் முஸ்லிம் அமைச்சர் ஒருவரை இலக்கு வைத்து இந்த பிரேரணை கொண்டு வரப்படுகிறது என்பது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வரும்போது ஜே.வி.பி. அது தொடர்பில் முடிவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## மன்னிப்புக் காலத்தில் 12 ஆயிரம் பேர் சரண்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து இடையில் தப்பிச் சென்றவர்களுக்கு மீண்டும் சட்ட ரீதியாக விலகிக் கொள்வதற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில் 12 ஆயிரம் பேர் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் இம்மாதம் 10 ஆம் திகதி வரையில் இந்த கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், தேவை கருதி இக்கால எல்லை கடந்த 17 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, 12 ஆயிரத்து 312 பேர் இராணுவத்தில் சரணடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## மர்மமாக மரணமடைந்த இளைஞனின் சடலம் மீட்பு

(கேகாலை)

சந்தேகத்திற்கு இடமான முறையில் மரணித்த இளைஞன் ஒருவரின் சடலம் கேகாலை பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ளது.

கேகாலை தம்புல்கமுவ பாதையில் அட்டக்காகஹமுலகந்த என்ற இடத்தில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 14 ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியே சென்ற 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (இ-7)

## கைதிகளைச் சந்திக்க விசேட அனுமதி

(கொழும்பு)

வெசாக் வாரத்தை முன்னிட்டு இன்று சிறைக் கைதிகளைச் சந்திக்க அவர்களது உறவினர்களுக்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கைதிகளுக்கு உணவு மற்றும் பானங்களை வழங்கவும் உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இருப்பினும், எடுத்துவரப்படும் பொருட்கள் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படவுள்ளதாகவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

## பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்

(கொழும்பு)


பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் நாளை 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதன் உபவேந்தர் உபுல் திஸாநாயக்க அறிவித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 120 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 120 | 120 | 160 |
| தக்காளி | 100 | 100 | 140 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 250 | 150 | 140 | 100 |
| கோவா | 120 | 100 | 100 | 80 | 120 |
| கரட் | 100 | 90 | 120 | 80 | 200 |
| பூசணி | 80 | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 130 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 150 | 180 | 240 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 90 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 60 | 50 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 80 | 200 |
| பீற்றூட் | 150 | 70 | 120 | 80 | 120 |
| கறிமிளகாய் | 150 | 100 | 100 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 140 | 80 | 60 | 50 | 80 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 240 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | — | 120 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 30 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 180 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 220 | 200 | 240 | 250 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | — | 100 | 60 | 110 | — |




# இளம் விஞ்ஞானிகள்



மச்சு ரொம்ப ரொம்ப குறும்புக்காரப் பையன். அதேசமயம் பயங்கர புத்திசாலி. பாரதி வித்யாலயாவுல லெவன்த் படிச்சுட்டிருந்தான். அவனோட ப்ரெண்ட் பிந்து.

இன்னும் ஒரு மாசத்தில் அவங்க ஸ்கூல்ல ஒரு பெரிய சயன்ஸ் எக்ஸிபிஷன் நடக்கப்போகுது. இந்தியா முழுவதிலும் இருந்து புதுப்புது கண்டுபிடிப்புகளோடு அந்தப் போட்டியில் கலந்து கொள்ள வெகுவேகமாகத் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

போட்டிக் கண்டுபிடிப்புகளைக் காட்சிப் பொருளாக வைக்கவேண்டியது பாரதி வித்யாலயாவில்தான். அதனால், ஒவ்வொரு ஸ்கூலிலிருந்தும் அவங்க மாணவர்கள் என்ன கண்டுபிடிப்பை வைக்கப் போறாங்கங்கற பட்டியலை அந்தந்தப் பள்ளி ஆசிரியர்கள் பாரதி வித்யாலயாவுக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர்.

பாரதி வித்யாலயா சார்பில் மிச்சுவும் பிந்துவும் கலந்துக்கறதா இருந்தாங்க. அவங்க எலெக்ட்ரானிக் பெல்ட் ஒண்ணு தயாரிக்கறதுல இருந்தாங்க. அது சாதாரண பெல்ட் இல்லை. அதில் ப்ரோக்ராம் செட் பண்ணினால், ஒரு இடத்தில் இருந்து ரொம்ப வேகமா இன்னொரு இடத்துக்கும் போக முடியும், அதுவும் யாரோட கண்களுக்கும் தெரியாமல்!

பெல்ட்டின் பக்கிள் பகுதி ஒரு மினி கம்ப்யூட்டராக வேலை பார்த்தது.

பெல்ட்டில் உள்ள பட்டன்கள் மூலம் போக வேண்டிய இடத்தை செட் செய்து, பக்கிளில் இருக்கும் சிவப்பு வண்ண பட்டனை அழுத்தினால், நம்மைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களது பார்வையிலிருந்து ஜூட் விட்டு, நாம் செல்ல வேண்டிய இடத்துக்குச் செல்லலாம்.

இதற்காக இன்ஃப்ராரெட் கதிர்களை பெல்ட்டினுள் செலுத்திக் கொண்டிருந்தாள் பிந்து. அப்போது வேகமாக உள்ளே நுழைந்தான் மிச்சு.

"பிந்து, நம்மளோட கண்டுபிடிப்பு ப்ரைஸ் வாங்குமா?" என்றான்.

"கண்டிப்பா கிடைக்கும்..." என்றாள் பிந்து.

"இல்லே பிந்து! நமக்குப் போட்டியா வந்திருக்கிற கண்டுபிடிப்புகள்ல ரெண்டு என்னை ரொம்ப பயமுறுத்துது... ஹைதராபாத்தில உள்ள மதர் தெரஸா ஸ்கூல், ஒரு சாட்டிலைட் எக்ஸிபிட் பண்ணுது!

கிட்டத்தட்ட மூணு கோடி ரூபா செலவழிச்சிருக்காங்க. நெனச்ச நேரத்தில் அதன் மூலமா எந்த காலேஜ்ல, ஸ்கூல்ல, நாட்டுல, வீட்டுல இருக்கிற எந்த சப்ஜெக்ட் ஸ்பெஷலிஸ்டா இருந்தாலும் உடனடியா வீடியோ கான்ஃப்ரென்ஸிங் மூலமா பாடம் நடத்துவாங்க. இதுமாதிரி இன்னும் நிறைய உபயோகம் இருக்கு அதுக்கு!

மும்பையின் மேத்தா பவுண்டேஷன் ஸ்கூலோட கண்டுபிடிப்பு என்ன தெரியுமா? ஒரே ஒரு டம்ளர் தண்ணியை ரொட்டேட்டிங் வீலில் விட்டு, அதைப் படுவேகத்தில் சுழற்றி, அது மூலமா ஒரு தொழிற்சாலைக்குத் தேவையான மின்சாரத்தைத் தயாரிக்கிறது! மிச்சு சொன்னதைக் கேட்டு பிந்துவும் மிரண்டாள்.

போட்டி நாள். பிந்துவைக் காணவில்லை. பெல்ட்டையும் காணவில்லை! மிச்சுவுக்கு மட்டுமல்ல... அவங்க ஆசிரியருக்கும் அதில் பயங்கர வருத்தம். சாயந்திரம்தான் ஸ்டாஃப் ரூமுக்கு பிந்து வந்தாள்.

"நீ என்ன காரியம் பண்ணியிருக்கே, தெரியுமா?"னு மிச்சு கத்தினான். "தெரியும். அதுக்கு முன்னாடி, நீ என்ன செஞ்சேன்னு நினைச்சுப் பார். அந்த ரெண்டு கண்டுபிடிப்புகளையும் நாம கண்டுபிடிச்ச இந்த பெல்ட்டைப் போட்டுப் பாழாக்க முயற்சி செஞ்சே...

நேற்றிரவு இதைப் போட்டு, யார் கண்ணுக்கும் தெரியாமல் லாப்புக்கு வந்தே... ரெண்டுலயும் உள்ளே பேசிக் ப்ரோக்ராம்களில் மாற்றங்கள் செஞ்சே! இப்படி நீ மாத்தி வெச்சிருக்கிற குறையுள்ள கண்டுபிடிப்புகளோட நம்மளோடது போட்டி போட்டா, ஈஸியா ஜெயிச்சிருக்க முடியும்! எனக்கு அது பிடிக்கலை.

அதான் பெல்ட்டை உன்னிடமிருந்து எடுத்துட்டுப் போயிட்டேன். ஆனால், நான் இங்கே தானிருக்கேன். உன் கண்ணுக்குத் தெரியாமா! நீ மனசு திருந்தி வந்தா, இந்தக் கண்டுபிடிப்பை இன்னும் மெருகேத்தி, அடுத்த வருஷம் வைக்கலாம். நான் சொல்றது சரிதானே மிச்சு!" என்றாள் பிந்து.

## பொது அறிவுத் துளிகள்

- 'உயிரின் ஆறு' என அழைக்கப்படுவது, இரத்தம்.
- ஒரு உணவு நிலையில் இருந்து மற்றொரு உணவு நிலைக்கு சக்தி கடத்தப்படுவதே 'உணவுச்சங்கிலி' எனப்படும்.
- பூனையின் ஆயுட்காலம், 12 வருடங்கள்.
- ராக்கெட்டுகளில் எரிபொருளாகப் பயன்படும் சேர்மம், ஐதரசன்.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு, 1986.
- நம்முடைய கால் பாதங்களில் 16 எலும்புகள் இருக்கின்றன.
- போலியோ தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்தவர், ஆல்பர்சேலின்.
- அஜந்தாவில் உள்ள குகைக்கோவில்களின் எண்ணிக்கை, 27.

## பாட்டி...



அன்பு நிறைந்த பாட்டி என்னை
அணைத்துத் தூக்கும் பாட்டி
இன்ப மான கதைகள் எல்லாம்
எனக்குச் சொல்லும் பாட்டி

வாழைப் பழமும் இனிப்பும் எனக்கு
வாங்கித் தந்த பாட்டி
தோளிற் கிடத்தி முதுகைத் தடவித்
தூங்க வைக்கும் பாட்டி

பள்ளிக் கூடப் பாடம் வீட்டில்
படிக்கச் சொல்லும் பாட்டி
துள்ளிக் குதித்து மண்ணில் வீழ்ந்தால்
துடைத்துக் கழுவும் பாட்டி

கோவிலுக்குப் போகும் போது
கூட்டிச் செல்லும் பாட்டி
கும்பிடுநீ கும்பி டென்று
குனிந்து சொல்லும் பாட்டி

அப்பா அம்மா அடிக்க வந்தால்
அலறித்தடுக்கும் பாட்டி
தப்பாய் நானும் பிழைகள் செய்தால்
தானே புலம்பும் பாட்டி

ஔவை பாட்டி பாடித் தந்த
ஆத்தி சூடிப் பாட்டை
செவ்வையாகப் பாடச் சொல்லிச்
சிந்தை மகிழும் பாட்டி.

இன்னல் கோடி வாழ்வில் வந்து
எதிர்த்து நின்ற போதும்
தன்னை லத்தைப் பேணி டாத
சால்பு கொண்ட பருவம்

சென்ற கால நிகழுங் காலச்
செயல்கள் யாவும் தேர்ந்தே
என்று வாழும் எதிர்காலத்தை
இயற்றும் இளமைப் பருவம்

தன்னை உயர்ந்த ஜாதியாகவும் இன்னொரு மனிதனை தாழ்ந்த ஜாதியாகவும் கருதுபவன் மனநோயாளி. - அம்பேத்கர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தேசிய துக்கதினமாக அறிவியுங்கள்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் புனித திடலுக்கு வருகின்றவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம் எனக் கருதப்பட்ட போதிலும் பெருந்திரளான மக்கள் அங்கு கலந்து கொண்டு தங்கள் அஞ்சலிகளை செலுத்தியுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிப்பு தமிழ் மக்களின் உரிமை என்பதாக இராணுவத் தளபதி அறிவித்திருந்தார்.

2010ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிப்பு தமிழ் மக்களின் உரிமை என இலங்கை அரசு அறிவித்திருக்க வேண்டும்.

ஆனால் அன்றைய அரசு முள்ளிவாய்க்காலில் இறந்துபோன தமிழ் மக்களை நினைவுகூருவதற்குக் கூடத் தடை விதித்து, இராணுவ கவச வாகனங்களை வீதிகளில் நிறுத்தி பயமுறுத்துகின்ற அநாகரிகத்தனத்தைச் செய்தது.

ஆனால் பத்து ஆண்டுகள் நிறைவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழ் மக்களின் உரிமை என்று இந்த நாட்டின் இராணுவத் தளபதி கூறுகின்ற அளவில் நிலைமை மாறியுள்ளது.

நாம் இங்கு கூறுவதெல்லாம் வன்னிப் போரில் உயிரிழந்த அத்தனை தமிழ் மக்களும் அப்பாவிகள் - போருக்குள் அகப்பட்டு காப்பாற்றுவார் இன்றி உயிரிழந்து போனவர்கள்.

அவர்களின் உயிரிழப்புக் குறித்தோ, அவர்களின் குடும்பங்கள் படும் பேரவலம் குறித்தோ இந்த நாட்டின் அரசு எந்தக் கவனமும் செலுத்தவில்லை. உரிய இழப்பீடுகள், நிவாரணங்கள் வழங்கவில்லை.

தமிழினம் எக்கேடு கெட்டாலும் அதுபற்றிப் பரவாயில்லை என்ற மனநிலையில் இன்னமும் சிங்கள ஆட்சியாளர்கள் இருப்பதுதான் இந்த நாட்டைப் பிடித்த பெரு நாசம்.

எனினும் சமகால சூழலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அங்கீகரிப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

எனவே மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை தேசிய துக்க தினமாக அறிவிக்க வேண்டும். அன்றைய தினம் மதுபான சாலைகள், மாமிச விற்பனைச் சந்தைகள், வர்த்தக நிலையங்கள், களியாட்டங்கள், பொது நிகழ்வுகள் என அனைத்தும் தடை செய்யப்பட்டு வன்னி யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற நாளாகப் பிரகடனம் செய்ய வேண்டும்.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்த பெரும்பாவம் இந்த நாட்டை சும்மா விடப் போவதில்லை.

எனவேதான் இலங்கை அரசும் படைத்தரப்பும் தமிழ் மக்களுக்குச் செய்த நெட்டூரத்துக்குக் கழுவாய் தேட வேண்டிய தேவை உள்ளது.

இதற்கு முன்னதாக நடந்த உண்மைகளை ஏற்றுக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்ற குற்றத்தை உணர்ந்து கொண்டு முதலில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை தேசிய துக்க நாளாகப் பிரகடனம் செய்வது முதற்பிராயச்சித்தமாகும்.

# காத்தான்குடிக்கு தனிக்கல்வி வலயம்

## ஹிஸ்புல்லா மீது வியாழேந்திரன் பாய்ச்சல்

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவின் நடவடிக்கைகளை பார்த்தும் நாம் கண்மூடி, வாய்பொத்திக் கொண்டு இருக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆளுநர்பதவியை வைத்து தன் பகுதியை மையப்படுத்தி புதுக்கல்வி வலயத்தை உருவாக்குவதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

அதற்கு முன்பு ஆளுநர் முழு மாகாணத்திற்குமானவர் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காத்தான்குடியை மையப்படுத்தி புதிய கல்வி வலயமொன்றை உருவாக்கும் கிழக்கு ஆளுநரின் செயற்பாடு தொடர்பில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிரத்தியேக ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர்மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்கள் உண்டு. இதில் நான்கு கல்வி வலயங்கள் தமிழ் மாணவர்களை உள்ளடக்கியது. ஐந்தாவது கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி வலயம்.

இது முஸ்லிம் மாணவர்களை உள்ளடக்கிய வலயம். கடந்த காலங்களில் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, எங்கும் இல்லாதவாறு புவியியல் தொடர்பே இல்லாமல் முஸ்லிம் மாணவர்களுக்கு என்றே உருவாக்கப்பட்ட தனிக் கல்வி வலயமாகும்.

எம்மைப் பார்த்து இனவாதிகள் எனச் சுட்டிக்காட்டும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் இனவாத செயற்பாடே இது. ஏனென்றால் முன்பு கல்குடா, மட்டக்களப்பு கல்வி வலயங்களுடன் இணைந்திருந்த முஸ்லிம் பாடசாலைகளை தமிழர்கள் பாடசாலைகளிலிருந்து பிரியுங்கள் என்று நாம் கூறவில்லை.

முதன் முதல் பிரித்தது முஸ்லிம் அரசியல்வாதிகளே. தற்போது கிழக்கு ஆளுநர் நடத்தும் ஆசிரியர் இடமாற்றமும் இது போன்றுதான். பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் முஸ்லிம் பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் கோரவில்லை. ஆனால் இடமாற்றம் கோரியது முதலில் முஸ்லிம் ஆசிரியர்களே.

புவியியல் தொடர்பில்லாமல் கல்வி வலயத்தை உருவாக்கியது மாத்திரமல்ல, தற்போது காத்தான்குடிக்கு மாத்திரம் ஒரு தனிக்கல்வி வலயத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் ஆளுநர் இறங்கியுள்ளார்.

ஏற்கனவே காத்தான்குடியிலுள்ள 22 பாடசாலைகளுடன் சேர்த்து கலாநிதி ஹிஸ்புல்லா வித்தியாலயம், அல்-ஹிக்மா வித்தியாலயம், மஹ்ரூத் லெப்பே ஆலிம் வித்தியாலயம், சேர் ராசீக் பாரீட் வித்தியாலயம், காத்தான்குடி மீறாபள்ளி வித்தியாலயம், ஜவாத் ஆலிம் வித்தியாலயம், பூநொச்சி முனை அஸ்மா வித்தியலயம், மனாறுல் ஹூதா புதிய வித்தியாலயம் என எட்டு பாடசாலைகளைப் புதிதாக உருவாக்கி மொத்தம் 30 பாடசாலைகளுடன் இவ் வலயம் உருவாக்கப்படவுள்ளது.

தனது ஆளுநர் பதவியை வைத்து தன்பகுதியை மையப்படுத்தி புதுக்கல்வி வலயத்தை உருவாக்குவதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அதற்கு முன்பு ஆளுநர் முழு மாகாணத்திற்குமானவர் என்ற அடிப்படையில் செயற்பட வேண்டும்.

தற்போது 22 பாடசாலைகளையும், சுமார் 7.5 சதுர கிலோமீற்றரும் கொண்ட காத்தான்குடிக்கு தனிக்கல்வி வலயம் என்றால் 83 பாடசாலைகளையும், சுமார் 1600க்கும் மேற்பட்ட சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும் கொண்ட கல்குடா கல்வி வலயத்தினை எத்தனையாகப் பிரித்து தனிக்கல்வி வலயங்கள் உருவாக்குவது? நான்காகப் பிரிக்க வேண்டுமல்லவா? மட்டக்களப்பு கல்வி வலயம் 65 தமிழ் பாடசாலைகளையும், சுமார் 300 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் கொண்டுள்ளது.

இவ்வலயத்தில் மூன்று கல்வி வலயங்களை உருவாக்க வேண்டுமல்லவா? மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் 67 பாடசாலைகளையும், சுமார் 477 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும் கொண்டது. இங்கு மூன்று கல்வி வலயங்களை உருவாக்க வேண்டுமல்லவா? பட்டிருப்பு கல்வி வலயம் 69 பாடசாலைகளையும், சுமார் 225க்கும் மேற்பட்ட சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும் கொண்டது. இங்கு மூன்று கல்வி வலயங்களை உருவாக்க வேண்டுமல்லவா?

ஆளுநர் என்பவர் காத்தான்குடிக்கு மட்டும் உரித்தானவர் அல்ல. முழு கிழக்கு மாகாணத்திற்கும் உரியவர். ஆகவே அவர் ஒரே நடைமுறையையே எல்லா இடங்களிலும் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளைப் பார்த்தும் நாம் கண்மூடி, வாய்பொத்திக் கொண்டிருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கை பௌத்த நாடு அல்ல; மங்களவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

### ஐ.தே.கவிற்குள்ளேயே கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

நிதியமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் வெளியிட்டிருந்த கருத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாணந்துறை பரந்த மேற்கு தொகுதி அமைப்பாளர் ரோஹித ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

பாணந்துறை -- கெசல்வத்தை கோரக்கான பிரதேசத்திலுள்ள அமைச்சர் மங்கள சமரவீரவின் வீட்டுக்கு எதிரில் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கை பௌத்த சிங்களவருக்கு மட்டுமே உரிய நாடு அல்ல என குறிப்பிட்டிருந்தார். அமைச்சரின் இந்தக் கருத்துக்கு சிங்கள தரப்புகளிடம் இருந்து கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இதற்கு விளக்கமளித்திருந்த அமைச்சர் மங்கள, இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரிய நாடு அல்ல. நாட்டில்வாழும் அனைத்து மக்களுக்கும் உரிய நாடு என்ற அர்த்தத்தில்தான் தான் அதனைக் கூறியதாக குறிப்பிட்டிருந்தார். (இ-7)

## விகாராதிபதியை கூரிய ஆயுதத்தால் தாக்கியவர் கைது

மதுபோதையில் வந்து விகாராதிபதியொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்ற நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராஜாங்கனை - யாய தெக - துடுகெமுனு பௌத்த மையத்தின் விகாராதிபதி மாமன் கடவல தம்மசிறி தேரரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

நேற்று முன்தினமிரவு மதுபோதையில் விகாரைக்கு வந்த சந்தேகநபர் தாது மாளிகையை திறக்குமாறு விகாராதிபதியுடன் முரண்பட்டுள்ளார். இருப்பினும் விகாராதிபதி அதனை நிராகரித்துள்ளதைத் தொடர்ந்து வீட்டிற்கு சென்று கூரிய ஆயுதமொன்றை எடுத்து வந்து தேரரைத் தாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை தொடர்ந்து பிரதேசத்தில் இருந்து வெளியேறிய சந்தேகநபர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார். தாக்குதலில் காயமடைந்த விகாராதிபதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### துரியாதீத தவம்- பலன்கள்



பொறுமை, விட்டுக்கொடுத்தல், ஈகை ஆகிய மூன்று பண்புகள் குண்டலினியோகிகட்குத் தானாக அமையும். (Tolerance, Adjustment & sacrifice). இயற்கையின் மறைபொருள்களை உணர முடியும். மக்களுக்குள் இருக்கும் வேறுபாடுகள் ஆகிய உருவ அமைப்பு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி, உடல் வலிவு, சுகம், செல்வம் ஆகிய ஏழையும் நல்ல நிலைக்கு மாற்றி இணைய வைக்கிறது. வினைப்பதிவுகளை மாற்றுகிறது. மனதின் மறுமுனையான தன்னைத் தெய்வத்தோடு இணைக்கிறது. நல்முனைப்பு, பழிச்செயல் பதிவுகள், வேண்டாப்பற்று என்று கூறப்படும் மும்மலங்களையும் நீக்கி விழிப்பு நிலைக்கு வரவழைக்கிறது. யோகிகள் பற்றற்றவினின்று விடுபட்டுக் கற்றறிவில் ஈடுபட்டு முடிவில் முற்றறிவிலையும் ஆவர். பிரவிருத்திமார்க்கத்தினின்று விடுபட்டு நிவர்த்தி மார்க்கத்திற்கு ஈர்க்கிறது. புலனடக்கம் உண்டாகி அறிவு அமைதியடையச் செய்கிறது. பிரம நிலையான உண்மை அறிவதற்கு நுண்மையறிவு நுற்படச் செய்கிறது. எல்லை கட்டிய தன்மையினின்று விடுபடச் செய்கிறது. பகுதி அறிவு ஆனது முழுமையை நோக்கிப் பயணம் ஏற்க உதவுகிறது. மனம் ஓடாது, தன்னை மறவாது மனதைப் பயிற்சிப்படுத்த வேண்டும். மனமே செயல்படும். எண்ணம், சொல், செயலால் எப்பொழுதும் எப்போதும் நன்மையே விளைவிக்க நாட்டமாயிருக்கச் செய்யும்.

# அரியாலை அருணோதயாவின் கிண்ணத்தை வென்றது அரியாலை சனசமூக நிலைய அணி

அரியாலை அருணோதயா சனசமூக நிலையத்தின் 59வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு அமரர்களான கந்தையா-கனகரத்தினம், கந்தையா-புஸ்பராசா ஞாபகர்த்தமாக நடைபெற்ற அழைக்கப்பட்ட உள்ளூர் கழகங்களுக் கிடையிலான மென்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் நடைபெற்றது.



இப்போட்டியில் அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையத்தை எதிர்த்து அரியாலை சனசமூகநிலையம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 05 ஓவர்கள் முடிவில் 40 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அதிகப்ச ஓட்டங்களாக டினேஸ் 16 ஓட்டங்களையும்,அம்பிகைநேசன் 07 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் சதீஸ் 2 விக்கெட்டுக்களையும், ராஜா 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

41 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அரியாலை சனசமூக நிலைய அணியினர் ஜெரோசனின் அதிரடியில் 4.1 பந்துப் பரிமாற்றத்தில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்து அருணோதயாவின் 59 ஆவது ஆண்டு விழாவின் சம்பியனாகியது. அதிக ஓட்டங்களாக ஜெரோசன் 30 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். (க)

# இறுதிப்போட்டியில் 'இளங்கதிர்' அணி

வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்க தொடர் 5 ஆவது முறையாகவும் இறுதியாட்டத்தில் இளங்கதிர் A அணி வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் தொடர்ச்சியாக 5 ஆவது ஆண்டாக நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களிற்கிடையிலான 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத்தொடரின் பிளே ஒவ் ஆட்டத்தில் இளங்கதிர் A அணியினை எதிர்த்து ரேவடி A அணியானது மோதியது.

இப்போட்டியில் இளங்கதிர் A அணியானது 5-2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இளங்கதிர் A அணிசார்பாக பிரசாந், கபில் தலா 2 இரு கோலினையும், மதுசாந் ஒரு கோலினையும் பெற்றுக் கொடுத்தனர். ரேவடி அணி சார்பாக ரவி 2 கோல்களை போட்டார். (க)

# 35 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டம்; சம்பியன் பட்டத்தை வென்றது நவாலி சென்.பீற்றர்ஸ்

வலிகாமம் லீக்கில் அங்கம் வகிக்கும் அழைக்கப்பட்ட 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட தொடரில் சம்பியன் பட்டத்தை தனதாக்கியது நவாலி சென்பீற்றர்ஸ். தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் லீக்கில் அங்கம் வகிக்கும் அழைக்கப்பட்ட 35 வயதிற்கு மேற்பட்ட அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

நவாலி சென்பீற்றர்ஸ் எதிர் இளவாலை யங்கென்றிஸ் அணிகள் மோதின.

ஆட்ட நேர முடிவில் 2:2 என போட்டி சமநிலையில் முடிவடைந்தது. வழங்கப்பட்ட தண்ட உதை மூலம் 4:3 என சென்.பீற்றர்ஸ் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றது.



இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.பீற்றர்ஸ் நிகன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த கோல் காப்பாளராக சென்.பீற்றர்ஸ் அணியைச்சேர்ந்த பிறின்ஸ் தொடர் ஆட்டநாயகனாக யங்கென்றிஸ் சுரேந்தர் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (க)

# அபிநயன் சிறப்பான தடுப்பாட்டம் அரையிறுதியில் சைனிங்ஸ் அணி



அபிநயனின் அசத்தலான கோல்காப்பு மூலம் நேதாஜி அணியைவெற்றிகொண்டு பிளே ஓப் இன் அரையிறுதிச் சுற்றுக்கு நுழைந்தது சைனிங்ஸ் அணி. வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் சைனிங்ஸ் அணி பிளே ஓப் இன் Elim inator சுற்று ஆட்டத்தில்நேதாஜி அணியுடன் மோதியது.

இப்போட்டியின் முதல் பாதியில் சைனிங்ஸ் அணி ஒரு கோலினை போட்டு முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியில் நேதாஜி அணி ஒரு கோலினை போட இறுதியில் ஆட்டம் 1:1 என சமநிலையானது.

வெற்றியைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

போட்டியில் அசத்தலாக செயற்பட்ட சைனிங்ஸ் கோல்காப்பாளர் அபிநயன் சமநிலை தவிர்ப்பு உதையில் 2 பந்துகளை இலாவகமாக தடுக்க சைனிங்ஸ் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (க)

# யாழ். மாவட்ட ரீதியிலான சதுரங்க சுற்றுப்போட்டி

வல்வெட்டித்துறையில் இராமச்சந்திரன் அறக்கட்டளை நிதியத்தால் நடத்தப்படும் மாபெரும் சதுரங்க சுற்றுப்போட்டி-2019 யாழ் மாவட்ட ரீதியில் நடைபெறும் இச்சுற்றுப்போட்டி 10,12,14,16,18, 20 மற்றும் 20 வயதுக்கு மேல் பிரிவு என தனித்தனியாக போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் விலகல் முறையில் போட்டிகள் நடைபெறவுள்ளதுடன் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

சர்வதேச விதிமுறைகளுக்கமைவாக நடைபெறவுள்ள இச் சுற்றுப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் எதிர் வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக 0773527579, 0774126496 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# தென்மராட்சி பிரதேச விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவேன்

## டக்ளஸ் எம்.பி தெரிவிப்பு

இளைஞர்கள் சமூக அக்கறையுடன் ஒன்றுபட்டு உழைக்க முன்வரும் போதுதான் அவர்களது பிரதேசம் மட்டுமல்லாது எமது மக்களது அபிலாசைகளையும் இலகுவாக வெற்றிகொள்ள முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற தென்மராட்சி பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த போட்டியை நடத்திய நிர்வாகத்தினர் இப்பிரதேசத்திற்கென ஒரு பொதுவான சர்வ வசதிகளுடன் கூடிய மைதானம் இல்லை என சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனால் கடந்த காலத்தில் நான் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது சாவகச்சேரி நகராட்சிமன்ற மைதானத்தை புனரமைப்பு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தேன்.

ஆனாலும் துரதிஷ்டவசமாக ஆட்சி மாற்றம் அந்தத் திட்டத்தையும் தடுத்துவிட்டது. ஆனாலும் குறித்த நகராட்சி மைதானத்தை நிச்சயமாக வெகு விரைவில் ஒரு சர்வதேச தரத்திலான மைதானமாக புனரமைத்து உங்களது பயன்பாட்டுக்கு தர முடியும் என்று நம்புகின்றேன். இதை நான் அரசியல் நோக்கத்துடன் கூறவில்லை. எனக்கும் எமது இளைஞர்களுடைய அபிலாசைகளை நிறைவு செய்துகொடுக்க வேண்டும் என்ற பெருவிருப்பும் சமூக அக்கறையும் உள்ளது.

எமது பிரதேசத்தின் விளையாட்டுத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் கடந்த காலங்களில் குறிப்பாக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்திற்கும் இலங்கையின் பெரும்பாலான ஏனைய பகுதிகளுக்கும்இடையே எந்தவிதமான போக்குவரத்து வசதிகளும் இல்லாதிருந்த காலத்தில் எமது இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த, அவர்களுக்கு அத்துறையில் ஒரு அங்கீகாரத்தை கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் கப்பல்களிலும் விமான மூலமும் நான் தென்னிலங்கைக்கு அவர்களை அனுப்பிவைத்து பயிற்சிகளை வழங்கவும் அவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான வாய்ப்புக்களை கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் செய்து கொடுத்திருக்கின்றோம்.

இளைஞர்களது ஒரு கூட்டு முயற்சியின் வெளிப்பாடாகத்தான் இந்த தென்மராட்சி பிறிமியர்லீக் தொடரின் வெற்றி அமைந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# முன்னாள் போராளிகள்

## 40 பேருக்கு வாழ்வாதார உதவிகள்

### அங்கஜன் எம்.பி தெரிவிப்பு



யாழ்.மாவட்டத்தில் புனர்வாழ்வு பெற்று, தெரிவு செய்யப்பட்ட 144 பேரில் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னாள் போராளிகள் 40 பேருக்கு முதற்கட்டமாக வாழ்வாதார உதவி திட்டங்களை வழங்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள தலைமை காரியாலயத்தில் நேற்று மாலை முன்னாள் போராளிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

ஒரு பயனாளிக்கு ஒரு லட்சம் ரூபாய் வீதம் 40 பேருக்கு தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, உபகரணங்கள் மற்றும் பொருள் கொள்வனவிற்காக விசேடமாக இவ் நிதி வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது முன்னாள் போராளிகளோடு கலந்துரையாடலின்போது வழங்கப்படும் நிதிகளை உரிய முறைகள் ஊடாக தொழில் நடவடிக்கைகளுக்காக மூலதன முதலாக பயன்படுத்தி, சிறப்பான வாழ்க்கையை முன்னெடுக்குமாறும் குறிப்பிட்டார்.

பத்து வருடங்களுக்கு மேலாக எவ்வித மான ஊக்குவிப்புக்களும் வழங்கப்படாத நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனினால் தொழிலை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டமை பாராட்டத்தக்கது எனவும், முன்னாள் போராளிகளின் மீதான கரிசனைக்கு நன்றி தெரிவித்திருந்ததோடு தொடர்ச்சியாக தமது செயற்பாடுகளுக்காக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும், தாமும் கைகோர்த்து பயணிக்கத் தயார் எனவும் இதன்போது முன்னாள் போராளிகள் சார்பாக கருத்துக்களை தெரிவித்திருந்தனர். (3,10,114)

# பயங்கரவாதிகளின் இடமான

## காத்தான்குடியில் இராணுவ முகாம்

### மகேஸ் சேனநாயக்க தெரிவிப்பு

தற்போது அரசுடைமையாக்கப்பட்டுள்ள பயங்கரவாதிகளால் பயன்படுத்தபட்டு வந்த காணிகளில் இராணுவ முகாம்களை அமைப்போம் என இராணுவத் தளபதி லெப்.மகேஸ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு காத்தான்குடியில் அமைந்துள்ள தௌஹீத் ஜமாத் அமைப்பிற்கு சொந்தமானதெனக் கூறப்படும் முகாமில் மனோநிலையை மாற்றும் மனோதத்துவ ரீதியிலான பயிற்சிகளே மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "காத்தான்குடியில் பல ஏக்கர் காணியில் பயிற்சி முகாம்கள் இருப்பது தொடர்பான கருத்துக்களை நான் ஏற்க மறுக்கின்றேன். இங்கு தவறான புரிதலொன்று ஏற்பட்டிருக்கின்றது. இது இராணுவத்தினரினதோ அல்லது விடுதலைப் புலிகளுடையதைப் போன்றதொரு பயிற்சி முகாம்கள் அல்ல.

ஊடகங்களில் அவற்றின் ஒளிப்படங்களைப் பார்த்தேன். அது ஒரு சிறிய காணி. அங்கு யுத்தப் பயிற்சிகள் இடம்பெற்றிருக்கவில்லை. மாறாக மனோநிலையை மாற்றும் மனோதத்துவ ரீதியிலான பயிற்சிகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.



இவை முஸ்லிம்கள் வசிக்கும் பிரதேசங்களிலேயே இடம்பெற்றுள்ளன. அப்பிரதேசங்களில் தற்போது இராணுவ முகாம்கள் எதுவும் இல்லை.

கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம்கள் இராணுவத்தினருடன் சகோதரர்களைப் போன்றே பழகுகின்றனர். எனினும் சில அடிப்படைவாதிகள் அவர்கள் கண்களைக் கட்டிவிட்டு இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலை மீண்டும் உருவாகாதிருக்க அங்கும் இராணுவ முகாம்களை அமைப்போம். அதற்காக தற்போது அரசுடைமையாக்கப்பட்டுள்ள பயங்கரவாதிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த காணிகளில் முகாம்களை அமைப்போம்" என குறிப்பிட்டுள்ளார். (3)

# பயங்கரவாதத் தாக்குதலுக்கு வெளிநாடுகளிலிருந்து நிதி

### விசாரணைகளில் தகவல்

கடந்த 21ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற தாக்குதல்களை அடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளில், பயங்கரவாத குழுவிற்கு வெளிநாடுகளிலிருந்து பெரும் தொகை நிதி வழங்கப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட பெருமளவிலான நிதிகள், பயங்கரவாதிகள் மற்றும் தற்கொலை குண்டுதாரிகளின் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன என கிடைக்கப் பெற்ற தகவல்களின் மூலம் அறியமுடிகின்றது.

குறித்த வெளிநாட்டு நிதி உதவிகள் குறித்து முழுத் தகவல்களை பெற்றுக்கொள்ள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இருப்பினும் விசாரணைகள் இன்னும் நடைபெற்று வருகின்ற நிலையில் இலங்கைக்கு நிதியுதவி வழங்கிய நாடுகளின் பெயர்களை பொலிஸார் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

அண்மையில் வெளியான தகவல்கள் Bitcoin ஊடாக இலங்கைக்கு தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நிதி வழங்கியதாக தகவல்கள் வெளியாகின.

குறிப்பாக இந்த தாக்குதலுக்கு முன்னர் டொலர்கள் என்ற பெயரில் Crypto நாணயத்தை மாற்றுவதாக தகவல் கிடைத்ததாக வைட்ஸ்ட்ரீம் நிறுவனத்தின் இணை நிறுவனர் இஷ்க் லெவி தெரிவித்திருந்தார்.

குறித்த தாக்குதல் நடத்தப்படுவதற்கு முதல் நாள் அதாவது 20ஆம் திகதி, Coin Payments மூலம் Bitcoin சமநிலை நூற்றுக் கணக்கான சதவிகிதம் உயர்ந்துள்ளமையை விசாரணைகளின் மூலம் அறிந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பிரதான இருப்பு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி 500,000 டொலர் முதல் 4.5 மில்லியன் டொலர் வரை உயர்ந்தது என்றும் இதன் பின்னர் தாக்குதல் நடத்தப்பட்ட அன்று அதன் விகிதம் மீண்டும் வழமைக்கு திரும்பியதாகவும் வைட்ஸ்ட்ரீம் நிறுவனத்தின் விசாரணைகள் தெரிவிக்கின்றன. (3)

# தமிழ் மக்களுக்கு சேவை செய்ய என்னோடு இணையாதவர்கள் அரசுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள்

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

தமிழ் மக்களுக்கு சேவை செய்ய என்னோடு இணையாதவர்கள் இந்த அரசுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். இன்றைய அரசின் செயற்பாடுகளுக்கு அவர்களும் பங்காளிகள்தான் என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு மும்மொழிகளிலும் மகிந்த ராஜபக்ஷ பேசினார்.

இதன்போது தமிழில் பேசியவை வருமாறு,

"நாம் சமாதானத்தை இந்த நாட்டில் ஏற்படுத்தினோம். எமது தாய் நாட்டில் சமாதானம் இன்று சிதறிப் போயுள்ளது. எனக்கு இது மிகவும் மனவேதனையாகவுள்ளது. உங்களுக்கு என்மீது வருத்தம் இருக்கலாம்.

உங்கள் வாழ்க்கையை மேம்படுத்த ஜனாதிபதியாக நான் செய்த சேவை உங்களுக்கு நன்றாகத் தெரியலாம்.

நிம்மதியான எமது தாய்நாட்டினை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் புதிய அரசிடம் பாரம் கொடுத்தோம். எல்லா தலைவர்களும் இணைந்து இந்த நாட்டை எங்களிடமிருந்து பொறுப்பு எடுத்தார்கள்.

தமிழ் மக்களுக்கு சேவை செய்ய என்னோடு இணையாதவர்கள் இந்த அரசுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். இன்றைய அரசின் செயற்பாடுகளுக்கு அவர்களும் பங்காளிகள் தான்.

இங்கு வாழும் எல்லா மக்களும் நிம்மதியாக வாழ வேண்டும். சந்தோசமாக வாழ வேண்டும். அந்த நாளை உருவாக்க மீண்டும் நான் பாடுபடுவேன். இது நிச்சயம். நான் சொல்வதைச் செய்பவன். செய்வதைச் சொல்பவன். நாளை நமதே" என்றார். (3)

## எவ்வித போர்க்...

பல உயிரிழப்புக்களுடன் வெற்றி கொண்ட பயங்கரவாதம் 10 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் நாம் பிறிதொரு அடிப்படைவாத தீவிரவாதத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. சர்வதேசத்துடன் தொடர்புடைய தேசிய தீவிரவாதத்தின் தாக்குதலே அண்மையில் இடம்பெற்றது. 2008ஆம் ஆண்டு மும்பை நகரில் குண்டுத் தாக்குதல நடத்தியது இந்திய பிரஜை அல்ல. ஆனால கடந்த மாதம் ஈஸ்டர் தினத்தில் தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்தியவர்கள் 'இலங்கைப் பிரஜைகள்' என்பது ஒரு கட்டத்தில் வருந்தத்தக்கது.

விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலினால் கொல்லப்பட்ட உயிர்களை விட அதிகமான உயிரிழப்புக்கள் ஒரு தற்கொலை குண்டுதாரியினால் சம்பவிக்கப்பட்டது. தொடர்ந்து அரசாங்கத்தின் தாக்குதலுக்கும் பழிச்சொல்லுக்கும் உள்ளாகிய இராணுவமே இன்று இந்த நாட்டை பாதுகாத்துள்ளது. அனைத்து மக்களும் இராணுவத்தினரை போற்றி மதிக்க வேண்டும் என்ற நிலையில் நாம் அனைவரும் இன்று உள்ளோம்.

இலங்கையில் எவ்வித போர்க்குற்றங்களும் இடம் பெறவில்லை என்று 10 வருட கால வெற்றியினை கொண்டாடும் இத்தருணத்தில் தைரியமாக குறிப்பிட முடியும். யுத்தத்தை வெற்றி கொள்ளும் விதமாகவே சர்வதேச போர்ச்சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா உள்ளிட்ட பிரபல்யமான நாடுகளில் பின்பற்றப்பட்ட போர்ச்சட்ட விதிமுறைகளை பின்பற்றியே யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது.

நாட்டுக்காகப் போராடிய இராணுவத்தினர் தொடர்ந்தும் மதிக்கப்பட வேண்டும். அரசியல் கொள்கைகள் மாற்றமடையும் போது இராணுவத்தினரை ஒருபோதும் வேறுபடுத்தி அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது. இராணுவத்தினரது தேவையினை தற்போதே அரசாங்கம் முழுமையாக புரிந்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (3)

## புலிகள் மீதான...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நம தமிழ் இனம் வரலாற்றுச் சிறப்புப் பெறறது. ஐம்பதாயிரம் ஆண்டுகளில் எவ்வளவோ வெற்றிகளை நம் தமிழினம் பெற்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளை தங்கள் ஆளுகையின் கீழ் தமிழர்கள் வைத்திருந்தனர். அப்படிப்பட்ட தமிழினம் 2009 ஆம் ஆண்டில் பேரழிவைச் சந்தித்தது. அப்போது உலக நாடுகள் எதுவும் அந்த இனத்துக்கு ஆதரவு அளிக்கவில்லை. இந்த அழிவின் எச்சங்கள் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் நெஞ்சங்களில் நெருப்பாய் எரிந்து கொண்டிருக்கிறது. அது அணையக்கூடாது. அவ்வாறு இருந்தால்தான் நம் இனம் மீண்டும் எழுச்சி பெறும். நாம் செல்லாந்த நிலையை எட்ட முடியும். இந்த 10ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் ஜூலை 6, 7ஆம் திகதிகளில் மாநாடு நடத்தப்படவுள்ளது. இதைத் தொடர்ந்து திருச்சி, மதுரை, புதுச்சேரி நகரங்களிலும் மாநாடு நடத்தப்படும். விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் 5 ஆண்டுகளுக்கு மத்திய பா.ஜ.க. அரசு தடையை நீட்டித்துள்ளது. 2009 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளை முற்றிலுமாக அழித்து ஒழித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தத் தடை நீட்டிப்புக்கான அவசியம் என்ன? விடுதலைப்புலிகள் மீதான தடையை காங்கிரஸ் அரசு 1991 ஆம் ஆண்டில் விதித்தது. தமிழ்நாட்டையும் சேர்த்து தமிழீழம் கேட்டு விடுதலைப்புலிகள் போராடுவதால், இந்தியாவுக்கு ஆபத்து என அப்போதைய காங்கிரஸ் அரசு கூறியது. ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கம் தொடங்கப்பட்ட நாள் முதல் 2009ஆம் ஆண்டு வரை இந்தியாவுக்கு எதிராகச் செயற்படவில்லை. இந்தியாவுக்கு எதிரான நாடுகளிடமும் உதவிகள் பெறவில்லை. இந்த விடயத்தில் பிரபாகரன் தெளிவாக இருந்தார். இதைப் பிரதமர் மோடி உணர வேண்டும். ஆனால், இந்திய அரசு உதவி செய்த சிங்கள அரசு சீனா, பாகிஸ்தானிடம் உறவு கொண்டாடியது. விடுதலைப்புலிகள் மீதான தடை நீட்டிப்புக்கு அப்போதைய காங்கிரஸ் அரசு கூறிய காரணத்தையே இப்போதைய பா.ஜ.க. அரசும் கூறுகிறது. எனவே, காங்கிரசுக்கும், பா.ஜ.கவுக்கும் வேறுபாடு இல்லை.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீட்டிப்பு என்பது தமிழுணர்வுக்கு எதிரானது. இது தமிழர்களுக்கு எதிரான தடையாகவே கருதப்படுகிறது. தமிழர்களை ஒடுக்க நினைப்பது ஒருபோதும் வெற்றி பெறப் போவதில்லை என்றார் நெடுமாறன். (3)

## 73 ஆர்.பி.ஜி...

(கடுவெல)

கடுவெல முஸ்லிம் கொலனி அன்சார் மாவத்தை பகுதியிலிருந்து 73 ஆர்.பி.ஜி. துப்பாக்கிக்குண்டு செலுத்திகள் மற்றும் வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவை மீட்கப்பட்டுள்ளதாக பொலநறுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குப்பைகளைச் சேகரிக்கும் பை ஒன்றினுள் இந்தப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட பொருட்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக பொலநறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (3)

## மயங்கி விழுந்த...

குடும்பஸ்தர் ஒருவர் தனது கச்சான் காணிக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்த வேளை மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அவரது நிலக்கடலை பயிருக்கு நீர்பாய்ச்சிக் கொண்டிருந்த வேளை மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கண்டியினை பிறப்பிடமாகவும் சின்னச் சாளம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட 47 வயதுடைய செ.சிவானந்தம் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் அவருக்கு அவரது உறவினர்கள் தேநீர்கொண்டு சென்று கொடுக்க சென்றவேளை அவர் மயங்கி வீழ்ந்து கிடந்ததைக் கண்டு உடனடியாக அவசர அம்புலன்சுக்கு அறிவிக்கப்பட்டு ஒட்டுசுட்டான் மாவட்ட வைத்தியசாலை கொண்டு செல்லப்பட்டு உயிரிழந்த அவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று முன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (3,281)

## யாழ். பண்ணை...

மண்டை தீவுச் சந்திக்கு அண்மையாக இடம் பெற்றது மூவரும் காரில் மண்கும்பான் சாட்டிக் கடற்கரைக்குச் சென்று திரும்பும் போதே இந்த விபத்து இடம்பெற்றது. வேகக் கட்டுப்பாட்டை யிழந்த கார், வீதியோரம் உள்ள கட்டைகளுடன் மோதுண்டு கடலுக்குள் பாய்ந்தது எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (3)

## ஜனாதிபதித் தேர்...

தயாராகி வருகின்றனர். வன்முறை காலங்களிலும் அதாவது 1989 ஆம் ஆண்டில் நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க மக்கள் முன்வந்தனர்.

1989 ஆம் ஆண்டு வன்முறையான சூழ்நிலையிலேயே தேர்தல் நடந்தது. நான் முதல்முறையாக அந்தத் தேர்தலில் போட்டியிட்டேன். அப்போது தேர்தலில் போட்டியிடும் நபர்களுக்கு தண்டனை மரணம். முதல்கள்ள தேர்தலை பகிஷ்கரித்தேன்.

பாராளுமன்றத்தை பகிஷ்கரித்தோம். வாக்களிக்கச் செல்லும் முதல் 5 நபர்களை கொலை செய்வார்கள். வாக்களிக்கச் சென்ற 5 பேர் தெற்கில் கொல்லப்பட்டனர். அப்படியான சூழ்நிலையிலும் மக்கள் வாக்குச் சாவடிகளுக்கு சென்று வாக்களித்தனர்.

மொட்டு கட்சி என்ற வகையில் எந்த அச்சுறுத்தல் இருந்தாலும் புதிய அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்த வாக்களிக்குமாறு நாங்கள் கிராம மட்டத்திற்கு சென்று மக்களை அணிதிரட்டி வருகின்றோம் எனவும் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார். (3)

## விடுதலைப் புலி...

அண்மைய கால வரலாற்றில் பயங்கரவாத அமைப்பொன்றை முற்றாக அழித்த ஒரே நாடு இலங்கை எனவும் அவர் கூறியுள்ளார்.

போர் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் கடந்துள்ளதை முன்னிட்டு, கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் ஆற்றிய விசேட உரையின் போதே மகிந்த ராஜபக்ஷ இதனைக் கூறியுள்ளார்.

நடந்து முடிந்த போரில் முப்படையினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் என 25 ஆயிரத்து 367 படையினர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான சாதாரண பொலிஸ் அதிகாரிகள், சாதாரண சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஆயிரக்கணக்கிலும் அரசியல் தலைவர்கள் பலரும் இந்தப் போர் காரணமாக உயிரிழந்தனர்.

எனது அரசாங்கம் வெளிநாட்டு அழுத்தங்களை பொருட்படுத்தாது போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. அவர்கள் கூறியதை கேட்காமல் போரை முடிவுக்கு கொண்டு வந்தது. சிலருக்குப் பிரச்சினையாக அமைந்தது. சீனா இலங்கைக்கு உதவுவது அந்த வெளிநாட்டுச் சக்திகளுக்கு பிரச்சினையாக அமைந்தது.

நாங்கள் போரை முடிவுக்கு கொண்டு வந்தாலும் தற்போதைய அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நாட்டின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர், உலக வல்லரசுகளின் விருப்பு வெறுப்புகளுக்கமைய செயற்படும் அரசாங்கமாக மாறியது.

தற்போதைய அரசாங்கம் தமது வெளிநாட்டு எஜமானர்களுடன் இணைந்து, ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் யோசனை ஒன்றை நிறைவேற்றியது. இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களை விசாரிக்க வெளிநாட்டு நீதிபதிகள் பங்களிப்புடன் கலப்புப் போர் நீதிமன்றத்தை ஏற்படுத்த இணங்கியது.

யோசனையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய இலங்கை அரசாங்கம் பல சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. இறுதியாக காணாமல் போனோர் சம்பந்தமான செயலகத்தை ஏற்படுத்தும் சட்டம் கொண்டுவரப்பட்டது எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (3)

## வெங்காயத்...

தீர்வை கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் அறவிடப்படுகிறது.

புதிய அதிகரிப்புடன் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி தீர்வை, கிலோ ஒன்றுக்கு 40 ரூபாவாக அறவிடப்படவுள்ளது.

உள்நாட்டு பெரிய வெங்காய உற்பத்தியாளர்களின் நலன்கருதி இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (3)

## குடும்பஸ்தர்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 39 வயதுடைய மாங்கநாதன் மகேஸ்வரன் என்பவருடைய சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் நேற்று முன்தினம் யாரும் இல்லாத நிலையில் தனிமையில் அவர் இருந்ததாகவும், நேற்று அதிகாலை அவருடைய மகன் வீட்டிற்கு சென்றபோது அவர் சடலமாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக அவருடைய உடலில் இரத்தம் வெளியேறி இருப்பதை அவதானிக்கக் கூடிய நிலையில் இது கொலையா? தற்கொலையா? என்ற சந்தேகம் அவர்கள் மத்தியில் எழுந்து இருக்கின்றது.

சம்பவம் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (3)

## பாராளுமன்ற...

அவருடன் மேலும் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (3)

## புலிகளை தோற்கடிக்க...

ஜனாதிபதி, இந்திய இராணுவத்தால் கூட விடுதலைப் புலிகளை தோல்விய டையச் செய்ய முடியாமல் போனது. பல்வேறு ஆக்கிரமிப்புகளை எதிர் கொண்ட எமது இராணுவம் இறுதி யாக வெற்றி இலக்கை அடைந்தது.

முப்பது வருடகால கொடிய பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்த வெற்றியை அடைந்து பத்து வருடங்கள் நிறைவுபெறும் இந்த சந்தர்ப்பத்தில் அதற்கு முற்றிலும் வேறுபட்ட சர்வதேச பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிர்பாராத வகையில் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது.

முப்பது வருடகால கொடிய பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் உயிர்த்தியாகம் செய்த அங்கவீன முற்ற இராணுவ வீரர்களுக்கு எனது கௌரவத்தை தெரிவித்துக் கொள்கிறேன். உயிர்த் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் பெற்றோர்கள், மனைவிமார் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். (3)




விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
021 5674145
077 2931062
077 6655413

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபைபுதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.